
பக்கங்கள்-16 ஆடி,05.2015 விலை-30.00




# நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -128

## தேசியத் தலைவரின் முப்பது வருட போராட்டமே தமிழ் மக்களின் அரசியற் கட்டமைப்பைப் பலப்படுத்தியது - அரியநேத்திரன்



## இரு பிரதான கட்சிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் காலைப்பிடிக்க வேண்டும்



## வடக்கு-கிழக்கில் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படுமா?




தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிழக்கு மாகாண முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் அவர்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக தினப்புயல் ஊடகத்திற்கு தெரிவித்த கருத்துக்கள், கிழக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில் எதிர்வரும் தேர்தல் நிலவரங்கள், ஆசனப் பகிர்வுகள்,



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னகர்வுகள் அனைத்துமே திறம்பட நகர்ந்துசெல்கின்றது. உண்மையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் பொறுத்த

நாம் அவர்களை வரவேற்கின்றோம். மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தான் தமிழ்மக்களின் பலம் என உணர்ந்ததன் காரணமாக பலர் இப்பொழுது வேட்புமனு தாக்குதலுக்காக விண்ணப்பத்தினை தந்திருக்கிறார்கள். அதை பரிசீலித்து யாரை வேட்பாளராக நியமிப்பது என்பதை

தமிழரசுக்கட்சி கையில் எடுத்துள்ளது. அந்த வகையில் வேட்பாளர் தெரிவுகள் இடம்பெறும். ஆயுதக்கட்சிகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து

கொண்டுசெல்வதற்கு இவ்வாறானவர்கள் தேவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆனால் தேர்தல் என்கின்றபொழுது இரு விடயங்கள் இருக்கின்றது. புத்திஜீவிகள், கூர்மையானவர்கள் என இருக்கிறார்கள். அதனைவிட அரசியலில் திறமைசாலிகள் இருக்கிறார்கள். அதிலும் புத்திஜீவிகள் என நாம் பார்க்கின்றபொழுது ஒவ்வொரு துறைசார்ந்த புத்திஜீவிகள் இருக்கின்றார்கள். வைத்தியத்துறையில் உள்ளவர்கள் வைத்தியத்தில் திறமையானவர்களாக இருக்கின்றார்கள். பொறியியல், கணனித்துறை, நீதித்துறை என ஒவ்வொரு துறையிலுமுள்ளவர்கள் நிபுணத்துவம் மிக்கவர்களாக இருக்கின்றார்கள். உதாரணமாக வைத்தியத்துறையினை எடுத்துக்கொண்டால் அதில் பல்வேறான வைத்திய செயற்பாடுகள் இருக்கின்றன. இருதய நோய் உடைய ஒருவர் பல்வைத்தியர் ஒருவரிடம் செல்லமுடியாது. அனைத்து புத்திஜீவிகளும் எல்லாத்துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்கள் எனக் கூறிவிடமுடியாது. ஒரு துறை சார்ந்த புத்திஜீவிகளை அந்தந்த துறை களிலே களமிறக்கிக்கொள்வது வரவேற்கத்தக்கது.

தேர்தலைவைத்துப்பார்க்கின்றபொழுது அடிப்படையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. எவ்வாறுபோட்டியிட்டாலும் வடக்கில் யாரோ ஒரு தமிழ் மகன் தான் வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் 2010ம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 03 ஆசனங்களையும், திருமதி.மகேஸ்வரன் அவர்கள் ஐக்கியதேசியக்கட்சியில் 01 ஆசனத்தையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. கிழக்கினைப் பொறுத்தவரையில் 75விகிதம் தமிழர்களும், 25சதவிகிதம் முஸ்லீம் மக்களும் இருக்கின்ற பொழுதும் விகிதாசார அடிப்படையில் இன ரீதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவேண்டுமாகவிருந்தால் பலம்வாய்ந்த கட்சியாக இருப்பவர்களே பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவார்கள். குறிப்பாக இரண்டு தடவைகள்நான்பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கின்றேன். அந்தவகையில் 2010ம் ஆண்டுத் தேர்தலில் எமக்கு 4500 வாக்குகள் குறைவாகக் காணப்பட்டது. அதற்குமேல் கிடைத்திருந்தால் நாம் வெற்றிபெற்றிருப்போம். விகிதாசார அடிப்படையில் நாம் ஒரு இன ரீதியாக போராட்டத்தில் பங்கெடுக்கின்றபொழுது அவ்வாறு இனப்பிரதிநிதித்துவம் தேவை என அம்மாவட்ட மக்கள்

# தேசியத் தலைவரின் முப்பது வருட போராட்டமே தமிழ் மக்களின் அரசியற் கட்டமைப்பைப் பலப்படுத்தியது

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன்**

வரை எதிர்வரும் ஓகஸ்ட் 17ம் திகதி இடம்பெறப்போகும் பொதுத்தேர்தலில் நாங்கள் போட்டியிட்டு நிச்சயமாக வெற்றிபெறுவோம். அதில் எவ்வித மாற்றமும் இல்லை.

எதிர்வரும் 06ம் திகதி தொடக்கம் 13வரை வேட்புமனுத்தாக்கல் தொடர்பாக அறிவித்திருக்கும் இந்நிலையில், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் இருக்கின்றது. அத்தனைக் கட்சிகளும் ஒன்றுகூடி எத்தனைக்கட்சிகளுக்கு எத்தனை ஆசனங்கள் இருக்கின்றது. யாருக்கு ஆசனம் வழங்கப்படவேண்டும். போட்டியிடுபவர்கள் யார்? என்பது தொடர்பாக 06ம் திகதிக்கு முன்னர் ஒன்றுகூடி முடிவுகளை மேற்கொள்வதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தீர்மானித் திருக்கிறது. 06ம் திகதிக்குப் பின்னர்தான் மாவட்ட ரீதியாக போட்டியிடுபவர்கள் பற்றி அறிவிக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நாம் அதற்குரிய முன்னாயத்த வேலைகளை மேற்கொண்டுவருகிறோம். எதிர் வரும் 06ம் திகதி வவுனியாவில் இருக்கக்கூடிய நகராட்சி மண்டபத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், முக்கியஸ்தர்களும் கலந்தாலோசிக்க விருக்கின்றார்கள். அதில் தேர்தல் முன்னெடுப்புக்கள் தொடர்பாக தீர்வுகள் எட்டப்படும். அதற்குப் பின்னரும் மற்றுமொரு சந்திப்பினை நடாத்தவுள்ளோம். குறிப்பாக மாகாண சபை, உள்ளூராட்சி நகரசபை என அனைவரையும் இணைத்து இத்தேர்தல் தொடர்பாக நாம் கலந்தாலோசிக்கவுள்ளோம்.

அந்தவகையில் பல்வேறு கட்சிகள் இந்தத் தேர்தலில் களமிறக்கப்படவுள்ளார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். கடந்த காலகட்டங்களிலும்இவ்வாறுபலகட்சிகள் போட்டியிட்டன. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வேட்பாளர்களை நிறுத்துவதற்கு தயக்கங்கள் காணப்பட்டன. குறிப்பாகஒட்டுக்குழுக்கள் இந்தவேட்பாளர்களைப்பயப்படுத்துவதும், அச்சுறுத்தல் விடுவதும் இயல்பாகவே நடைபெற்றது. அது மட்டுமல்லாது தொலைபேசிகளில் கூட கொலை அச்சுறுத்தல்கள் விடப்படுகின்றபொழுது நாங்கள் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்கியிருந்தோம்.

வேட்பாளர்களுக்கு பெயரை கொடுத்துவிட்டு நாங்கள் தரவில்லை என பின்வாங்கிச் சென்றதையெல்லாம் 2010, 2012ஆம் வருட தேர்தல்களின்போதும் சந்தித்திருக்கிறோம். ஆட்சிமாற்றம்என்று நான்சொல்லவில்லை. ஜனாதிபதிமாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னர் இப்பொழுது பலர் ஆர்வம் காட்டுகின்றார்கள். உண்மையில்

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக பல்வேறான விமர்சனங்கள் எழுந்துள்ளமை உண்மைதான்.

தற்பொழுது 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைபில் இருக்கி றார்கள். அந்த 13 பேரும் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. வெறுமனே வட-கிழக்கு மாகாணங்களுக்கான வெவ்வேறான முடிவுகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினாலும், தமிழரசுக்கட்சியினாலும் மேற்கொள்ள இயலாது. அவ்வாறு எடுத்தால்கூட கட்சிக்குள் முரண்பாடுகளை தோற்றுவிக்கும். ஆயுதக்குழுக்களை இணைப்பது என்கின்ற கருத்துக்கள் ஒவ்வொரு முறையும் நடைபெறுகின்ற தேர்தல்களின் போதும் விமர்சிக்கப்படுவது வழக்கம். கருத்துக்கள் கூறுவதற்காக நாம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வதும் இல்லை. இருந்தாலும் இந்த ஆயுதக்கட்சிகளையும் இணைத்துத் தான் தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றோம். இந்த நான்கு கட்சிகளையும் இணைத்ததுதான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. இதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்தந்த கட்சிகளுக்கான வேட்பாளர்களை நியமிக்கும்பொழுது அக்கட்சிகளின் தலைவர்கள் யாரை தேர்தலில் போட்டியிடவைப்பது என்பது தொடர்பாக தீர்மானித்துக்கொள்வார்கள். அதன்பொழுது அவர்கள் யார் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டுமே தவிர, அனைவரும் கூறுகின்ற கருத்துக்களை செவிமடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் செயற் பாடல்ல. தற்பொழுது நான்கு கட்சிகள் இருக்கின்றன. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலை வராக இரா.சம்பந்தன் அவர்கள் இருக்கின்றார். எனவே இவர்கள் சரியாக ஆராய்ந்து வெற்றிபெறக் கூடியவர்களையும், மக்களுக்குச் சேவை செய்யக்கூடியவர்களையும் நிச்சயமாகத் தெரிவுசெய்வார்கள்.

அறிவாளிகளையும், புத்திஜீவி களையும் தான் இம்முறை பாராளுமன்றத்தேர்தலில் வேட்பாளராக இணைத்துக்கொள்ளவேண்டும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலும், தமிழரசுக்கட்சியிலுமுள்ள பல மூத்த அரசியல்வாதகிள் கூறியிருக்கின்றார்கள். அவ்வாறானவர்கள் இருந்தால் தான் எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்னேற்ற மடையும் என்கிறார்கள். அதனை ஏற்றுக்கொள்கின்றோம். கல்விமான்கள், புத்திஜீவிகள் தேவையானவர்கள் ஒன்றுதான். சர்வதேச ரீதியாக தமிழ்மக்களது பிரச்சினைகளைக்

புத்திஜீவிகளுக்கும் அரசியல் செல்வாக்கு இருக்கவேண்டும் என்பதுதான் உண்மையான நிலைப்பாடு. வெறுமனே புத்திஜீவிகள் என்று கூறிவிட்டு ஏழைமக்களிடம்சென்றுவாக்குப்பெறுவது யார்? என்ற கேள்வியும் எழுகிறது. அதுமட்டுமல்லாது பாமர மக்களிடமும் சென்று பணியாற்றக்கூடியவர்களாகவே வேட்பாளர்கள் அமையப்பெறவேண்டும். இதற்கு பல நாடுகளிலும் பல உதாரணங்கள் இருக்கின்றது. குறிப்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலும் இருக் கின்றது. 65 வருடகாலமாக பல புத்திஜீவிகள் இந்தக் கட்சிகளில் இருந்தார்கள். தமிழரசுக்கட்சி அல்லது தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இவற்றில் புத்திஜீவிகள் இருந்தார்கள்: இருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல்வேறான இயக்கங்கள் ஆயுதமேந்திப் போராடினாலும் கூட, விடுதலைப்புலிகளின் தேசி யத் தலைவர் பிரபாகரனால்தான் 30 வருடகாலம் தமிழ்மக்களுடைய தலைமை வழிநடத்திச்செல்லப்பட்டது.

ஆகவே நாம் புத்திஜீவிகள் என சித்தரிக்கின்றபொழுதிலும் கடந்த 30வருட காலமாகதமிழ்மக்களின் விடிவுக்காக இந்த மண்ணுக்காகப் போராடி போராளிகள் தம்முயிரைக் கொடுத்திருக்கிறார்கள் இத்தனைக்கும் காரணம் தலைவர் பிரபா கரனையே சாரும். அந்த வகையிலே அரசியல் ரீதியாக இவற்றினையும் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டிய தேவை இருக்கின்றது. புத்தி ஜீவிகளும், அரசியலிலே கொள்கை உடையவர்களும் எமக்குத் தேவை. அரசிற்கு சோரம்போகாது இனவிடுதலைக்காகப் போராடிய போரா ளிகளையும் இணைத்துக்கொண்டு எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம்.

விடுதலைப்புலிகள் அமைப்பினைச் சார்ந்தவர்களும் இந்தத்தேர்தலில் களமிறக்கப்படவிருக்கிறார்கள் எனச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இதனை நான் தவறு என கூறமாட்டேன். நிச்சயமாக அவர்கள் இந்த மண்ணுக்காக இறுதிவரை போராடியவர்கள். அவர்கள் உண்மையான பணியை மேற்கொண்டவர்கள். இதுவொரு புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னரும் கூட நாம் போராளிகளை தேர்தலுக்காக இணைத்திருக்கிறோம். கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள். இந்த அரசியல்வாதிகளை நாம் ஒரு சவாலாகக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு விகிதாசார

கருதுவார்களாகவிருந்தால் அந்த இனம் வெற்றி பெறவேண்டும் என்கின்ற தார்மீகக் கடமை அந்தக்கட்சிக்கு இருக்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை பொறுத் தவரை தமிழ்த்தேசியம் தொடர்பான அரசியல் காய்நகர்த்தல்களே நகர்த்தப்பட்டுவருகின்றன.

ஆனால் கடந்தகாலங்களில் இஸ்லாமிய மக்களும் தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட்டிருக்கின்றார்கள். அதனை நாங்கள் மறுப்பதாகவில்லை. முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் முஸ்லீம் மக்களை ஆதரித்துச்செல்லவேண்டிய நிலைப்பாடு இருக்கின்றது. அதுபோன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் தமிழ் மக்களை ஆதரித்துச்செல்லவேண்டிய நிலைப்பாடும் இருக்கின்றது. ஆகவே இந்த விடயங்களை நாங்கள் ஒருமித்து கையாளவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. முஸ்லீம் மக்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு நாங்கள் எந்தவிதத்திலும் தடையாக இல்லை என்பதையும் கூறிக்கொள்கிறேன். குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலில் முக்கியத்துவம் எனப்பார்க்கின்றபொழுது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாகிய நாம் நான்காவது தேர்தலாக இதனை எதிர்கொள்கின்றோம். 2002ஆம் ஆண்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு போட்டியிட்டபொழுது அதில் 14 ஆசனங்களை கைப்பற்றியிருந்தோம். 2004 ஆம் ஆண்டு 22 ஆசனங்கள் எனப் பெற்றிருந்தோம். இந்த இரு காலகட்டம் என்பது ஆட்சி நிர்வாகங்கள் வெவ்வேறுபட்ட தன்மையாகக் காணப்பட்டது.

வடகிழக்கினைப்பொறுத்தவரை விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த காலம். 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்றது. அதில் நாங்கள் 13 ஆசனங்களைப் பெற்றிருந்தோம். இந்த இடைவெளிக்குள் மிகமோசமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். வெளியே வரமுடியாத ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டிருந்தனர். இராணுவ மயமாக்கப்பட்ட பின்னர்தான் நாம் அந்தத் தேர்தலை சந்தித்திருக்கின்றோம். அக்காலகட்டத்தில் நாம் பாரியளவில் பிரச்சாரங்களை மேற்கொள்ளாத பொழுதிலும் அந்த முள்ளுக்கம்பிக்குள் இருந்த மக்கள் கூட உணர்ந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு வாக்க ளித்திருந்தனர்.

08ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தேர்தல் களமும், வாக்குவேட்டையும்

எதிர்வரும் ஓகஸ்ட் 17இல் பாராளுமன்றத்தேர்தல் ஒன்று இடம்பெறவிருக்கின்றது. இதனை முன்னிட்டு அனைத்துக்கட்சிகளின் அரசியல்வாதிகளும் வீடுவீடாகச்சென்று வாக்குகளைச் சேகரிக்கும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளனர். இதில் கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் பிரதானக் கட்சிகளாக ஐ.ம.சு.கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி, த.தே.கூட்டமைப்பு, ஜே.வி.பி. முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் முக்கிய இடம்பிடிக்கின்றன. அதிலும் குறிப்பாக வடகிழக்கில் செறிந்துவாழ்கின்ற தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இன்றுவரை திகழ்ந்துவருகின்றது. விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் 22 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, இன்று 14 ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்புக்களே இருக்கின்றன. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பிரபாகரனால் உருவாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இதனடிப்படையில் தமிழ்மக்கள் த.தே.கூட்டமைப்பிற்கு வாக்களித்துவருகின்றனர். இதனைச் சீர்குலைத்து, ஆசனங்களைச் சிதறடிக்கும் வகையில் அரசிற்கு ஆதரவான கட்சிகள் செயற்படுகின்றன.

ஒருசில தமிழ்க்கட்சிகளும் அரசுடன் இணைந்து காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறானவர்களை இனங்கண்டு, நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டியதன் அவசியத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை கூறவேண்டுமாகவிருந்தால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்தவேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். இதுவரை இடம்பெற்ற போராட்டங்கள் வீண்போகாத வகையிலும், தமிழ் மக்கள் சுயகௌரவத்துடன் வாழவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை ஆதரித்து, 22 ஆசனங்களாக உயர்த்தப்படாது விட்டாலும் கூட, குறைந்தபட்சம் 20 ஆசனங்களையாவது கைப்பற்றவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். த.தே.கூட்டமைப்பு தமிழ்மக்களுக்காக செய்தது என்ன? எனக்கூறிக்கொண்டும், போலி முகங்களைக்காட்டியும் பல கட்சிகள் வீடுவீடாக வருவார்கள். ஒன்றினைப் புரிந்துகொள்ளவேண்டும். மாறி மாறி வந்த அரசுகள் எல்லாம் போலியான வாக்குறுதிகளை வழங்கி தப்பித்துக்கொண்டனவே தவிர தமிழ் மக்களுக்கென எதனையும் சீராக மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் உரிமை என்கின்ற விடயத்தில் இதுவரையிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு தமிழினம் ஒடுக்கப்பட்டே வந்தது. இம்முறை த.தே.கூட்டமைப்பில் புத்திஜீவிகள் வேட்பாளர்களாக களமிறக்கப்படவேண்டும் என்கின்ற கருத்து ஒருபக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மறுபக்கம் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. ஏற்கனவே இருந்த புத்திஜீவிகளான குறிப்பாக குமார் பொன்னம்பலம், சேர்.பொன்.இராமநாதன், அமிர்தலிங்கம், தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், நீலன் திருச்செல்வம், லக்ஷ்மண் கதிர்காமர் இவ்வாறு பல புத்திஜீவிகள் சிங்கள இனத்திற்கு பக்கவாத்தியம் வாசித்ததைத் தவிர வேறொன்றுமில்லை. தாயக உணர்வுடன் இருப்பவர்கள் நிச்சயமாக களமிறக்கப்படவேண்டியது அவசியம். புத்திஜீவிகள் தெரிவுசெய்யப்படவேண்டும் எனக்கூறிய வடமாகாணசபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரன் ஜெகநாதன் ஒரு புத்திஜீவியா? என மக்கள் கேள்வியெழுப்பியுள்ள அதேநேரம் இடம், பொருள், ஏவல் பார்த்துப்பேசவேண்டியதன் அவசியத்தை த.தே.கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அறிந்திருக்கவேண்டும். கூட்டமைப்புக்குள் பிரச்சினைகள் இருப்பதாக வெளியுலகிற்குக்காட்டி மக்கள் மத்தியில் சென்று வாக்குப்பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது. ஒற்றுமையே பலம் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டுவதற்கு தமிழ்த்தரப்பு கட்சிகள் அனைத்தும் இணைந்து த.தே.கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்துவது பொதுத்தேர்தலின் அவசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

52

கொடுத்தோம். கப்டன் மனோவைச் சுட்ட LMG, சபேசனைச் சுட்ட பதுங்கிச் சுடுகலன், மேஜர் கஜேந்தியைச் சுட்ட PK LMG உட்பட பல படைக்கலன்கள், சிதறிய உடல்கள் என எல்லாவற்றையும் அகற்றினோம். புயலடித்த பூமியின் அமைதியோடு அந்தப் பகுதி உறைந்துகிடந்தது.

கஜேந்தி இப்போது எங்களோடு இல்லை. வேவு அணியின் பொறுப்பாளரான மேஜர் அரசி பிளாட்டூன் பொறுப்பை ஏற்றார். கீர்த்தி அங்கே நின்றுகொண்டார். எல்லோரும் வேலைகளுடன்.

நேரம் 10.00மணியைக் கடந்து விட்டிருந்தது. பின்னணியில் காலை உணவை வேலை நடக்குமிடங்களில் இறக்கிவிட்டு உணவு ஊர்தி போய்விட்டிருந்தது. சிலர் சாப்பிட்டிருந்தார்கள். பலர் சற்று வேலையை முடித்துவிட்டுச் சாப்பிடலாம் என்றிருந்தார்கள். மரங்களை நாம் வெட்டிக்கொண்டிருந்த டொக் டொக் ஒலியை மீறிக்கேட்ட வேறொரு ஒலி எம் கவனத்தைத் திருப்பியது. படையினரின் எறிகணைகள் காற்றைக் கிழித்தபடி வரும் கூவல் ஒலி அது. பின்னகர்ந்திருந்தோம்.

சத்தம் கேட்டதுமே நாங்கள் அவரவர் காப்பரண்களை நோக்கி ஓடத்தொடங்கினோம். ஆனால் எங்களுடைய இடங்களை அடைவதற்கிடையில் படையினரைச் சந்திக்கநேரிட்டதால், பின்பகுதியிலே சண்டை ஆரம்பமானது. அன்று பயிற்சி ஆசிரியர் சுகி கண்ணிவெடி அணியைச் சேர்ந்த நாலைந்து பேருடன் எமது முன்னரங்கின் முன்புறமாகக் கண்ணிகளை விதைத்துக்கொண்டிருந்தார். பின்னணியிலும், முன்னரங்கில் ஆட்கள்

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



காப்பரண்களை மீளமைத்து, மறைப்பு வேலிகளைச் சீராகக்கட்டி, இனியொரு நகர்வு வந்தாலும் முறியடிப்பதற்குத் தயாராக மைதிலி நின்றார். அம்பகாமப் பகுதி பரபரப்பாகவே இருந்தது. படையினர் நகர்வொன்றைச் செய்ய முற்படுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அம்பகாமத்திலேயே நின்ற சிறப்புத் தளபதி விதுஷா அவர்கள் எமது அணிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருந்தார். எமது படையணியின் போர்ப்பயிற்சி ஆசிரியர்களுக்குப் பொறுப்பாக இருந்த லெப்.கேணல் காவியா தனது ஆசிரியர் அணியோடு களமிறங்கியிருந்தார். முன்னரங்கின் அருகில் குறிப்பிட்ட சில பயிற்சிகள் விதுஷாவின் மேற்பார்வையில் சுகி, புரட்சிகா, சீத்தா, செய்மதி, வர்ணா, அங்கயற்கண்ணி, பிருதுவி, காவியா ஆகியோராலும் தீபன் அவர்களின் மேற்பார்வையில் வேறு பயிற்சிகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

ஒரு சண்டை நடந்தால் பின்னணி வேலைக்குப் பாதைகள் மிக முக்கியம். பாதை எடுக்கும் வேலை உட்பட எல்லா வேலைகளையுமே கொம்பனிப் பொறுப்பாளர்களை அடிக்கடி கூப்பிட்டுக் கதைப்பதும், தானே நேரடியாகப் பயிற்சிகளைக் கவனிப்பதுமாக விதுஷா அவர்கள் வேகப்படுத்திக்கொண்டிருந்தார். அம்பகாமப் பகுதியில் நின்ற யாருமே ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருந்தோம்.

அன்று காப்பரண்களுக்கிடையேயான தேடுதல் நடவடிக்கையை முடித்துக்கொண்டு, பின் பாதைகளை எடுக்கும் வேலைகளுக்காகப் பெரும்பாலானவர்கள் பின்னணிக்கு வந்துவிட்டார்கள். 100மீ. தூரத்திலும் 1000மீ. தூரத்திலுமாக அவரவர் தத்தம் வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். காவலரண்கள் ஒவ்வொன்றும் மிக நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தன. சில காப்பரண்களில் ஒருவருமே இல்லை. கண்காணிப்பதற்கும் போதாத கணிசமானளவு தூர இடைவெளிகளிலேயே ஓரிருவர் நிறுத்தப்பட்டிருந்தனர். ஏனைய இது வழமையான விடயம்தானே. எல்லோரும் மரங்களிடையே காப்பெடுத்துக்கொண்டோம். ஆனால் பின்னணியில் மழைபோல அடர்த்தியாக விழுந்த எறிகணைகளும் முன்பகுதியில் எழுந்த சூட்டு ஒலிகளும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று விளக்கியது.

காட்டுக்குள் 15கி.மீ நீளமான பகுதியில் நாங்கள் நிலைகொண்டிருந்தோம். எங்களின் சக்திக்கு அப்பாற்பட்ட தூரம் அது. மணலாற்றிலிருந்து மன்னார்வரையுள்ள படையினரின் முன்னரங்க நிலைகளுக்கேற்ப நாமும் எமது முன்னரங்கை அகட்டவேண்டியிருந்ததால் எமது மிகக்குறைந்த ஆட்பலத்துக்கு ஏற்ப காப்பரண்களுக்கிடையிலான இடைவெளி நினைத்துப்பார்க்க முடியாதளவு தூரம் கொண்டதாக இருந்தது. கத்தினாலும் கேட்காத தொலைவிலேயே அடுத்த காப்பரண் இருந்தது. வழமையாக ஒரு காப்பரணில் இருந்து மற்றைய காப்பரணுக்குப் போவதாயிருந்தால் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சுடுகலன்களைத் தயார்நிலையில் வைத்தபடிதான் போய்வருவோம். குடிதண்ணீர், உணவு எடுக்கப்போகும்போதும், காப்பரண்களுக்கு அவற்றை வழங்கப்போகும் இதே முறையையே கடைப்பிடித்தோம்.

10-15 மீ. தூரத்துக்குள் ஒருவர் வந்தால்தான் காட்டுக்குள் காணலாம். அந்த அடர் காட்டிடையே கற்பனைக்கு எட்டாத, சொன்னால் யாருமே நம்பமுடியாத தூர இடைவெளிகளில் அமைந்திருந்த காப்பரண்கள், கண்காணிப்பு அரண்களாகத்தான் செயற்பட்டுக்கொண்டிருந்தன. வேலைக்குப் போவதென்றால், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில கிலோமீற்றர்களுக்கொரு காப்பரணில் ஆட்களை நிறுத்திவிட்டு, எல்லோருமே புறப்பட்டுவிடுவோம். அன்று அப்படித்தான் நடந்தது. ஆனால் நாம் வேலைகளுக்காக மிக நீண்ட தொலைவு நின்ற காப்பரண்களிலும் சண்டை தொடங்கியபோது, சுகி முன்னரங்குக்கும் வெளியே நின்றார். நிலைமையைப் புரிந்துகொண்ட சுகி காவலரண் பகுதிக்கு விரைந்தார். ஆனால் அங்கு சண்டைசெய்ய ஆட்கள் இல்லை. தன்னோடு நின்ற நாலைந்து பேரோடு இறங்கிய சுகி தன்னைநோக்கிவரும் படையினரைச் சுடத்தொடங்கினார்.

முத்தையன்கட்டுத் திசையில் நின்ற மேஜர் இளம்பிறை அங்கிருந்து வலப்புறம்நோக்கிக் காப்பரண் பகுதியால் அடித்துக்கொண்டு நகர்ந்தார்.

முன்னரங்கில் நின்ற கப்டன் நிலாமதியின் PK LMG இனை அவரின் உதவியாளர் 2ஆம் லெப்.மலர்மகள் இயக்கத்தொடங்கினார். நிலாமதி தன் T56-2 ஆல் அடித்துக்கொண்டிருந்தார். இவர்களது காப்பரண் பழைய காட்டுப் பாதையொன்றுக்குக் குறுக்கே அமைந்திருந்தது. பாதைவழியே பெருந்தொகையாக வந்துகொண்டிருந்த படையினரைத் தனித்துநின்ற இவர்கள் இருவரும் ரவைகள் முடியும்வரை தமது உயிர் பிரியும்வரை தாக்கிக்கொண்டே இருந்தார்கள். வேறொரு காப்பரணில் தனித்துநின்ற கப்டன் ராஜினியும் வீரவேங்கைகீதப்பிரியாவும்தமதுரவைகள் முடியும் வரை படையினரைச் சுட்டுவிட்டு, பெருந்தொகையாக வந்த அவர்கள் இவர்களைச் சூழத்தொடங்கியதும், கைக்குண்டுகளை வெடிக்கவைத்துத் தம்மை அழித்துக்கொண்டார்கள்.

இப்போது படையினருக்கு முன்பக்கம் எதிர்ப்பில்லை. அவர்கள் காட்டுக்குள் கணிசமானளவு தூரம் முன்னேறிவிட்டிருந்தனர். எதுவரை படையினர் நிற்கின்றனர் என்று தெரியாதளவுக்கு நாங்கள் காப்பரண்களைநோக்கிப் போகமுனைந்த திசைகளிலெல்லாம் படையினர் நின்றதால் கண்ட இடங்களிலும் சண்டை நடந்தது. பின்னரங்கைநோக்கிப் படையினரால் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் காட்டு மரங்களை முறித்துத் தள்ளிக்கொண்டிருந்தது. வேலை செய்துகொண்டிருந்தவர்களில்சிலர் அந்த இடங்களிலே காயமடைந்திருந்தனர். சிலர் வீரச்சாவடைந்திருந்தனர்.

சிறப்புத் தளபதி விதுஷா அவர்களின் கட்டளைப் பணியகத் தொலைத்தொடர்புக் கம்பிகள் முறிந்துவிழுந்தன. உடனடியாகப் பின்னணித் தளமொன்றில் நின்றிருந்த தொலைத்தொடர்புப் பொறுப்பாளர் பிரணவா ஒரு தொலைத்தொடர்புக் கம்பித்தொகுதியையும், படையியல் உபகரணக் களஞ்சியப் பகுதியைச் சேர்ந்த தீந்தமிழ் இரண்டு LMG களையும் எடுத்துக்கொண்டு மிதிவண்டியொன்றிலேறி அம்பகாமத்தைநோக்கி விரைந்தனர்.


தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 329. | 2ம்.லெப்.கல்கி/ அமராவதி | கிறிஸ்மேரி அருளானந்தம் | கிளிநொச்சி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 330. | 2ம்.லெப்.கவியழகி/வெண்மதி | அன்ரனீற்றா நீக்கிலாப்பிள்ளை | கிளிநொச்சி | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 331. | 2ம்.லெப்.செந்நிலா | சரஸ்வதி மாணிக்கம் | வவுனியா | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 332. | 2ம்.லெப்.கரிகாலினி | சகாயராஜி மகேந்திரநாதன் | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 333. | 2ம்.லெப்.மலர்வதனா | சசிகலா பொன்னுச்சாமி | வவுனியா | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 334. | 2ம்.லெப்.கலைச்செல்வி | சம்சனா பழனியாண்டி | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 335. | 2ம்.லெப்.கருவிழியாள் | கஜேந்தினி ஜெயசிங்கம | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |

# வடக்குக்கிழக்கில் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படுமா?

தமிழினம் சிறுபான்மையினம் என்னுங் காரணத்தால் அவ்வினம் சிங்கள மேலாதிக்கவாதிகளினால் இரண்டாந் தரப்பிரஜைகள் என முத்திரை குத்தப்பட்டுள்ளதுடன் அவ்வினத்தின் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் வசதிப்படும் இடங்களிலெல்லாம் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கித் தமிழர் தாயகத்தைப் படிப்படியாகக் கபளீகரம் செய்யும் கயமைத்தனம் சிங்கள-பௌத்த இனவெறியர்களுக்கு இருந்தமை தெரிந்ததே. இதன் விளைவாக 1960இலேயே முதன்முதலாகச் சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சியின் பலத்த எதிர்ப்பினால் பெரியளவில் அப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ முடியவில்லை. எனினும் அக்கட்சியானது 1965இல் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் பங்குபற்றியபோது அக்கட்சியின் எதிர்ப்பு இல்லாமலேயே கிழக்கிலங்கையில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றிருந்தன. அத்தோடு கிழக்கிலங்கையின் சில ஊர்களின் சிங்களப்பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாகப் பட்டில்ப்பளை என்னும் தமிழ் ஊர்ப் பெயர் கல்லோயா என மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இவ்வாறாகவே கிழக்கிலங்கையில் சிங்கள-தமிழ் ஊர்களின் எல்லைகளையண்டியும் கரையோரங்களிலும் விவசாயஞ் செய்யக்கூடிய சன நெரிசலற்ற இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றங்களின் வீச்சு அதிகரித்தது. குறிப்பாகத் திருகோணமலையின் சிங்களத் தொழிலாளர்களின் வதிவிட வசதியைச் சாட்டாகவைத்து அப்பகுதியில் பெருமளவுகுடியேற்றங்கள் இடம்பெற்றன. பிரிமா மா ஆலைத்தொழிற்சாலை, திருகோணமலைத் துறைமுகம் போன்றவற்றில் கடமையாற்றும் பெருமளவு தொழிலாளர்களின் வதிவிட வசதிகருதி அமைக்கப்பட்ட வீட்டுவசதிகள் பின்னர் அவர்களின் குடும்பங்களினதும் அக்குடும்பங்களின் தொடர்ச்சியான நகர்வுகளின் பாற்பட்ட சமூகங்களினதும் நலன் கருதியதானதாகக் கூறப்பட்டுப் பெருமளவில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றன. இக்குடியேற்றங்களை நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த கிழக்கிலங்கை உறுப்பினர்கள் எதிர்த்து அதிருப்தி வெளியிட்டார்களேயொழிய அவற்றைத் தடுத்து நிறுத்த அவர்களால் முடியவில்லை.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களால் பெரிதும் விசுவாசிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி. ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சரவையில் 1965ஆம் ஆண்டு பங்குபற்றியமையால் அப்போது அவ்வரசாங்கம் மேற்கொண்ட சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பில் வாய்கூடத் திறக்க முடியாத மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தது. நீண்டகாலமாகத் தமிழ் மக்களின் வடக்கு-கிழக்குப் பிரதிநிதிகளில் இலங்கைத் தமிழரசுக்கட்சியினரும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தபோதும் அவர்களால் எந்தவொரு சிங்களக் குடியேற்றத்தையும் தடுத்து நிறுத்த முடியாத கையாலாகாத நிலையிலேயேயிருந்தனர் எனலாம்.

இவ்வாறாகக் கிழக்கிலங்கையில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றம் படிப்படியாக விஸ்தீரணமடைந்தமையும் பின்னர் சிங்கள மேலாதிக்கவாதிகள் வடக்கின் வன்னியிலும், கரையோரங்களிலும், விவசாய வெளிகளிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ முனைந்து நின்றமையுங் கண்கூடு. வவுனியாவின் சிங்களக் குடியேற்றங்களை அண்மித்தமையாகவிருந்த எல்லைப்புறத் தமிழர் நிலப்பரப்புகளிலும் ஏனைய வன்னியின் இவ்வாறான நிலப்பரப்புகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகச் சிங்களக் குடியேற்றங்கள் முதலில் கிழக்கிலும், பின்னர் வடக்கின் வன்னியிலும் இடம்பெற்றபோது அவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய அரசியல் பலம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்கவில்லை.

பின்னர் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகியபோது இக் குடியேற்றவாசிகள் பலர் தாம் குடியேற்றப்பட்ட இடங்களிலிருந்து வெளியேறிச் சென்றமை தெரிந்ததே. முப்பது வருட காலமாகத்தொடந்து நீடித்த ஆயுதப்போராட்ட காலத்தின்போது சிங்களக் குடியேற்றம் என்னும் உணர்வே அற்றுப்போகவேண்டிய நிலை உருவாக்கப்பட்டமையும் அவ்வாறே அற்றுப்போனமையும் இயல்பானதே.

எனினும் ஆயுதப்போராட்டத்தின் தோல்விக்குப் பின்னர் சிங்களக் குடியேற்றங்கள் அத்தோல்வியினால் அமைந்த புதிய கள அமைவுகளின் பாற்பட்டும் இராணுவ நிலைவைப்பை ஆதாரமாகக்கொண்டும் புதிய பாணியில் இடம்பெற ஆரம்பித்திருக்கின்றன.

ஆயுதப்போராட்டம் முடிவுற்றதன் பின்னர் இராணுவத்தினர் வடக்கு-கிழக்குத் தாயகப் பிரதேசத்தில் நிலைகொண்டு இன்றுவரை அவர்கள் அத்தமிழர் தாயகப் பிரதேசத்தில் இருந்தும் வருகின்றனர். இவ்விராணுவம் வழிபடுவதற்கெனப் புத்தர் சிலைகளும் பௌத்த விகாரைகளும் தொடர்ச்சியாகத் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் அதிகளவில் நிறுவப்பட்டும் வருகின்றன. இராணுவத்தினரின் வழிபாட்டுக்கென நிறுவப்பட்டுள்ள இப்புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் சாக்காக கொண்டும் இவற்றிற்கு அருகிலுள்ள சுற்றுப்புறங்களில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் கள அமைவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் கிழக்கிலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலும், விவசாய வெளிகளிலும் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாக முன்னரேயே மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அப்போராட்டத்தின் தோல்விக்குப் பின்னர் மேலும் வலுப்பெற்றுள்ளமையோடு, விஸ்தீரணப்படுத்தும் ஏது நிலைக்குமாளாகி அவை முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. அத்தோடு விடுதலைப்புலிகளின் போராட்டத்தின்போது கிழக்கிலங்கையின் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் உட்படச் சிங்கள மக்கள் அவ்விடங்களைவிட்டுச் சென்றதும் தற்போது அவர்கள் அவ்விடங்களில் வந்து வசிப்பதுந் தெரிந்ததே. இதை அருமையான ஒரு வாய்ப்பாகக் கருதிய சிங்களப் பேரினவாத வெறியர்கள் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து தமது பாரம்பரியப் பிரதேசங்களை விட்டுச்சென்ற சிங்கள மக்கள் மீண்டும் தமது பாரம்பரியமான பிரதேசங்களுக்குத் திரும்ப வேண்டுமெனவும் சிங்கள மக்களைக் குடியேற்றி அப்பிரதேசங்களை வேண்டுமென்றே சிங்கள மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களெனப் படம்பிடித்துக்காட்டித் தமது தமிழர் தாயகப்பிரதேசத்தின் மீதான ஆளுகையைச் கச்சிதமாக வலுப்படுத்தியுமுள்ளார்கள். எனவே கிழக்கிலங்கையில் சிங்கள மக்களைக் குடியேற்றியமை காரணமாக சிங்களப் பகுதிகளாக்கப்பட்ட ஊர்களையும் பாரம்பரியச் சிங்கள ஊர்களெனப் படம்பிடித்துக்காட்டியமை சிங்கள மேலாதிக்க வெறியரின் தமிழர் நில ஆக்கிரமிப்பு மீதான பசிக்கு நல்லதொரு தீனியாகும்.

இவ்வாறாகக் கிழக்கிலங்கையின் பாரம்பரியத் தமிழர் பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றங்களினால் பாரம்பரியச் சிங்களப் பிரசேதங்களாக உருமாற்றப்பட்டமை ஆயுதப்போராட்டத்தின் தோல்வியின்பாலான சிங்கள-பௌத்த நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு கிடைத்த பெருவெற்றியெனவே கூறமுடியும்.

கிழக்கிலங்கையின் இப் பொய்த்தோற்றம் வடக்கின் சில பகுதிகளில் வாழ்ந்த சிங்கள மக்களைக்கொண்ட ஊர்களிலும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களினால் வெளிக்கொணரப்பட்டுச் சிங்கள-பௌத்த மேலாதிக்க நலன் பேணப்பட்டுக்கொண்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் வடக்கின் யாழ்ப்பாணத்திலுள்ள கந்தர்மடம் என்னுமிடத்திலுள்ள புராதன பௌத்த சின்னங்களை ஆதாரமாகக்கொண்டு அப்பகுதியிலே சிங்கள மக்கள் ஏற்கனவே குடியிருந்தார்கள் எனக் கூறியும் யாழ்ப்பாணத்தையும் கபளீகரம் செய்யும் தன்முனைப்பையும் சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதிகள் தம்மகத்தே கொண்டுள்ளதைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

கிழக்கின் கரையோரங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை எவராலுமே தடுத்து நிறுத்த முடியவில்லை. 1960களில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் எதிர்த்து நின்றபோதுங்கூட அவர்களால் அதைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை.

பின்னர் 1965இல் இக்கட்சியினர் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சரவையில் பங்குபற்றியிருந்தமையால் அக் காலப்பகுதியில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்களுக்குத் தாமும் துணைபோனவர்களாகவே கருதப்பட்டார்கள். இவர்களுடைய இக்காலப்பகுதியிலான கையாலாகாத் தனந்தான் பின்னாளில் பல்வேறு வகையான தன்மைகளைக்கொண்ட கைக்கூலிகளின் உதவியோடு சிங்களக்குடியேற்றமானது துரிதகதியில் வடக்கு-கிழக்கில் இடம்பெறுவதற்கு வழிவகுத்தது.

கிழக்கிலங்கையில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்கள் பாரம்பரியத் தமிழ்க் கிராமங்கள் பல சிங்களக் கிராமங்களாக மாறுவதற்கு வழிவகுத்தன. இதனால் நாடாளுமன்றத்திலும் உள்ளூராட்சிமன்றங்களிலும் கிழக்கிலங்கையின் தமிழர் பிரதிநிதித்துவத்தின் பலம் படிப்படியாக வலுக்குன்றி வந்தது.

இதன் விளைவாகச் சிங்களக் கிராம சேவகர் பிரிவுகளும், உதவி அரசாங்க அதிபர் பகுதிகளும் சிங்களத் தேர்தல்தொகுதிகளும்கிழக்கிலங்கையை ஆட்கொண்டு தமிழர் தனித்துவம் சிதைக்கப்பட்டு வந்துள்ளது.

இக்குடியேற்றங்களின் தொடர்ச்சியாக வடக்கின் வன்னிப்பகுதியிலும் வவுனியா எல்லைப்புறங்கள் உட்பட கரையோர, விவசாய, வெளிப்பிரதேசங்களிலும் சிங்களக் குடியேற்றம் முனைப்புப்பெற்று வந்துள்ளது. இதற்கு வவுனியாவில் இடம்பெற்ற சிங்கள-தமிழர் உதவி அரசாங்க அதிபர் (பிரதேச செயலர்) பிரிவுகள் சான்றாக விளங்குகின்றன.

தற்போது இராணுவ வழிபாட்டைச் சாட்டாகவைத்து தமிழர் தாயகத்தில் நிறுவப்பட்டுக்கொண்டிருக்கும் புத்தர் சிலைகளும், பௌத்த விகாரைகளும் அவ்விராணுவத்தினரின் குடும்பங்கள் முதலில் வடக்கு-கிழக்கில் குடியேறி அதன்பின் படிப்படியாக அவ்விடங்களைச் சூழச் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற வாய்ப்புள்ளது.

இன்று தமிழர் பிரதிநிதிகளாகவுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பார் இக் குடியேற்றங்களைத் தமிழ்நாட்டின் பாற்பட்ட இந்திய மத்திய அரசாங்கத்தின் அழுத்தத்தினாலோ அல்லது மேற்குலகின் அழுத்தத்தினாலோ அல்லது அமெரிக்காவின் அழுத்தத்தினாலோ தடுத்து நிறுத்துவார்களா? என வினவின் இல்லை என்பதே பதிலாக இருக்கமுடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளில் அம்பாறை மாவட்டச்சிங்களவிவசாயிகள் அத்துமீறிப் பிடித்துப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் நிலம் பாதிப்புக்குள்ளாகியதாகவும் இதனால் பாற்பண்ணையாளர்கள் நட்டத்திலும் இருந்து வந்திருக்கின்றனர். இதனால் மட்டக்களப்பில் கையகப்படுத்தும் கால்நடைகளுக்கான நிலங்களில் சிங்கள விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபடுவதால் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் விவசாயிகள் பாதிப்படைவதோடு அந்நிலமும் ஆக்கிரமிக்கின்ற சிங்களவர் வசமாகியும் விடுகின்றது.


எனவே வடக்கு கிழக்கில் இடம்பெறும் அத்துமீறல்கள் யுத்த காலத்திலும் நடைபெறவில்லை. யுத்தத்திற்கு முன்னரும் நடைபெறவில்லை. யுத்தத்துக்குப் பின்னர்தான் நடைபெறுகின்றன. இதை எதிர்த்துத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரால் தமிழர் பிரதிநிதிகள் என்னும் முறையில் குரலெழுப்பத்தான் முடிகின்றதேயொழிய அவ்வத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர்களால் முடியவில்லை. தடுத்து நிறுத்தவும் முடியாது.

கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமேயுள்ளது. மாகாண சபையின் ஆட்சி ஒரு பொம்மை ஆட்சியாகவே உள்ளது. எனவே இப்பொம்மை ஆட்சியினால் அவ்வாட்சிப் பகுதிக்குள் வதியும் மக்களின் பிரச்சினைகளை ஒரு போதுந்தீர்த்துவைக்க முடியாது. இதைப் புரிந்துகொண்ட மக்களும் இம்மாகாண சபையையோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களையோ கண்டுகொள்வதுமில்லை. அவர்கள் தொடர்பிலோ, அவை தொடர்பிலோ கண்டுகொள்வதுமில்லை.

08ஆம் பக்கம் பார்க்க...

**வீரப்பதி விநோதன்**

# திருகோணமலையைக் குறிவைக்கும் அமெரிக்கா



இலங்கையின் துறைமுகங்களிலே இயற்கை அமைவினாலும், வர்த்தகத் தொடர்பாடல்களினாலும் தலைநகர் கொழும்பிலுள்ள துறைமுகம், காலித்துறைமுகம் என்பவற்றைவிடவே அதி சிறப்பு வாய்ந்ததாகத் திருகோணமலைத் துறைமுகம் விளங்குகின்றது. இத் துறைமுகத்தின் மீது அமெரிக்கா ஏகாதிபத்திய வல்லரசின் பார்வை இலங்கையிலிருந்து பிரித்தானியர் வெளியேறிச்சென்ற ஆரம்பகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தை தனது சர்வதேச வர்த்தக வலையமைப்புக்குள் ஆட்படுத்தி அத்துறைமுகம் மூலமாக உலகளாவியளவிலான தனது ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களை வியாபிப்பதற்கு அமெரிக்காவானது முனைந்து நின்றது. இம் முனைப்பின் பாற்பட்டு அந்நாடானது திருகோணமலைப் பிரதேசத்தில் தனது வியாபார நடவடிக்கைகளை விஸ்தரித்து அதன் மூலம் அப்பிரதேசத்தில் குறிவைக்கும்கைங்காரியத்தில் ஈடுபட்டது. இதன் ஓர் அம்சமே 'பிறிமா' ஆலைத் தொழிற்சாலையாகும்.

இப்பின்னணியில் அமெரிக்க தேசமானது திருகோணமலையில் மேலும் தனது வியாபார நிறுவனங்களை விஸ்தரிக்க ஆரம்பித்தமை தெரிந்ததே. இவ்விடயத்தில் அவ்வப்போது ஜே.வி.பியினரின் எதிர்ப்புக்கள் மேலோங்கி நின்றமையாலேயே அமெரிக்காவின் இந் நடவடிக்கைகளில் தொய்வு நிலை தோன்றியது.

எனினும், இலங்கையின் சிறுபான்மையினப் பிரச்சினையைச் சாதகமாக வைத்தும் அமெரிக்காவானது ஆயுதப் போராட்டத்தின் முன்னரான காலப் பகுதியிலேயே தமிழ்த் தலைவர்களின் ஏகாதிபத்திய முதலாளித்துவ நலனின் பாற்பட்ட அரசியல் நிலைப்பாட்டைப் பயன்படுத்தியும் தமிழர் தாயகத்தின் பிரதான நகரப் பகுதியான திருகோணமலை மீது அதன் துறைமுகத்தின் பாற்பட்டுக் குறிவைக்கும் படலத்தை ஆரம்பித்தது. இக் குறிவைப்புக்குத் தமிழர் அரசியல் தலைமையானது தமது வர்க்க நலனின் பாற்பட்ட ஆதார சுருதியாக இருந்தமையானது தேசத்தினதும், தமிழ் மக்களினதும் துரதிட்டமே எனத் தான் கூற வேண்டும்.

பின்னாளில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டகாலத்தில் இந்நிலை ஓய்வு நிலையையெய்திய போதும் யாழ்ப்பாணத்தை இழந்து நீண்டகால நகர்வின் பின்னர் விடுதலைப்புலிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை மட்டுமே தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையும், ரணில் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடைக்கால நிர்வாகம் பேச்சுவார்த்தையென விடுதலைப்புலிகள் மோதல் தவிர்ப்புக்கு ஒப்புக்கொண்டமையும் அமெரிக்காவானது ஓய்வு நிலையிலிருந்த தனது திருகோணமலை மீதான குறிவைப்பை மீண்டும் புதுப்பிக்க ஆரம்பித்தது.

அமெரிக்கா தனது உலகளாவிய அளவிலான வர்த்தக நலன் கருதி அத்தேசங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இன, மத, பிரதேச, சமூக ரீதியிலான முரண்பாடுகளினால் உருவாகும் மோதல்களின்போது, அம்மோதல்களின் பாற்பட்ட காரணிகளைத் தனது கழுகுக் கண்களினால் நோக்கியும் இராஜதந்திர மனோபாவத்தினால் ஆராய்ந்திருந்தும் மோதல்களுக்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாக நடித்தும் மோதல்களில் சம்பந்தப்படும் தரப்பினரை நம்பவைத்து அத்தேசங்களின் பொருளாதாரமும் மோதல்களினாலும், யுத்தங்களினாலும் பலவீனப்படும்போது தனது மூலதனத்தை அத்தேசங்களில் பரவவிடுகின்றது. இவ்வாறாகத் தனது மூலதனத்தை அத்தேசங்களில் பரவவிடும் அமெரிக்காவானது இந்நாடுகளின் மக்களினால் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்களைத் தமது தலையாட்டிப் பொம்மைகளாக்கி தனது பொருளாதார ரீதியான கபளீகரத்தை அரசியல் ரீதியான ஆக்கிரமிப்பாகவும் மாற்றிக்கொள்கின்றது. இதற்கு வியட்நாம் மீதான அதன் ஆக்கிரமிப்பையும் பொருளாதாரச்சுரண்டலையும்சான்றாகக் குறிப்பிடலாம்.

இலங்கையையும் மற்றொரு வியட்நாமாக ஆக்கும் அவாவினால் அமெரிக்கா உந்தப்பட்டதன் வீச்சு ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரேயே அதிகளவில் இடம்பெற்றது. அமெரிக்கா தனது இவ்வகோரப் பசிக்குத் தீனிபோடுவதற்கு இலங்கையின் இனவாத யுத்தத்தைக் கச்சிதமாகக் கையாண்டது. இதன் பின்னணியில் திருகோணமலையில் அந்நாடு குறிவைப்பதற்குப் பல காரணிகளை முன்வைக்கலாம்.

திருகோணமலை 'தமிழர் தாயகம்' என வரையறுக்கப்பட்ட பிரதேசத்தின் இயற்கை அமைவு மிக்கதானவொன்றாக விளங்குவதோடு, நகரில் சிங்கள, இஸ்லாமிய வர்த்தகர்களும், அரசாங்க அலுவலர்களும் ஒரு சேர வாழ்ந்து வருவதோடு, கலாச்சார விழுமியங்கள் அந்நகரில் மூவின மக்கள் பிரிவினரதும் தனித்துவம் பேணப்படுவதற்கும் காரணிகளாக அமைந்திருக்கின்றன.

பூகோள ரீதியாக அமெரிக்கா தனது தேசத்திலிருந்து அல்லது சர்வதேச அளவிலான வர்த்தகமுகாம்களிலிருந்தோ கப்பல்களை நகர்த்தி இலங்கையில் தளம் பதிப்பதற்குத் திருகோணமலைத் துறைமுகம் மிகவும் பயனளிக்கக்கூடியதென உணர்ந்திருந்தது. அதனால் இந்நகரில் தனது மூலதனத்தைப் பாய்ச்சி பல்வேறு வர்த்தக நிறுவனங்களை உருவாக்கித் தனது சர்வதேசஞ் சார்ந்த வர்த்தகத்தை விஸ்தரித்துச் செல்வதற்கு இந்நகரம் பெரிதும் உகந்ததென அமெரிக்கா கருதியது.

அத்தோடு இந்நகரில் மூவினங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தனது துறைமுகஞ்சார் வியாபார நகர்வுகளுக்குப் பயனிக்கக்கூடிய விதமாக வேலை வாய்ப்புக்களை துறைமுகத்தில் வழங்குவதற்கு உறுதுணையாக இருப்பதோடுநகரில்தன்னால்நிறுவப்படும் நிறுவனங்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி மூவினங்களைச் சேர்ந்த இளையோரையும் தனது 'உலகமயமாக்கல்' என்னும் அகிலந் தழுவிய பொருளாதார வேட்டையின் பாற்பட்ட கவனத்திலிருந்து திசை திருப்புவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

அந்நாளில் உள்ள மூல வளங்களையும், மூவின மக்கள் உழைப்பையும் ஆதாரமாகக்கொண்டு தனது வியாபார நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கும், இலங்கை இனப் பிரச்சினையை மையமாகக்கொண்டு அரசியல் ரீதியான ஆளுகையை செலுத்துவதற்கும் இலங்கையிலேயே திருகோணமலையில் அமைந்துள்ள துறைமுகமும் வலுவான ஆதாரங்களாக இருப்பதை நன்குணர்ந்ததனாலேயே அமெரிக்காவானது திருகோணமலையில் தொடர்ந்தும் குறிவைத்துக் கொண்டிருக்கின்றது.

மேலும், தனது அகிலம் வியாபித்த வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தென்கிழக்காசியாவிலேயே அதிசிறந்த துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் விளங்குமெனப் புரிந்துகொண்ட அமெரிக்காவானது அத்துறைமுகநகரான திருமலையின் மீது குறிவைத்தபோது ஆயுதப்போராட்டத்தின் எழுச்சி அக்குறிவைப்பை பலவீனப்படுத்தியும், ஆயதப் போராட்டத்தின் வீழ்ச்சி அக் குறிவைப்பைப் பலப்படுத்தியும் வந்துள்ளது.

இந்நிலையில் தான் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு, கிழக்கு மக்களின் அரசியலில் தலையிட்டு அமெரிக்காவானது தனது கூர்மையான பார்வையைச் செலுத்தியதோடு அத்தெரிவு தமக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது பாதகமாக முடியுமா? எனவும் ஆய்வு செய்யத் தவறவில்லை.

காலங்காலமாக வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் தெரிவானது, ஏகாதிபத்திய உள்நாட்டு முதலாளித்துவ நலனுக்குச் சார்பாகவே பயன்படுத்தப்பட்டது. இதனால் தான் அமெரிக்காவானது விடுதலைப்புலிகள் அமைப்பை உலகளாவியளவிலான பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றென முத்திரை குத்தியதோடு, வடக்கு கிழக்கின் அரசியல் தெரிவுகளுக்கான வழமையான தன்மையைச் சாதகமாகப் பயன்படுத்தி பிரேமதாஷ, அமிர்தலிங்கம் அவர்களின் கூட்டிணைவின் பாலான இராஜதந்திரக் காய்களைக் கச்சிதமாக நகர்த்திச் சிங்கள மக்களின் அரசியல் தெரிவின் பாலான வர்க்க நலனையும், தமிழ் மக்களின் அரசியல் தெரிவின் பாலான வர்க்க நலனையும் ஒரு சேர இணைத்து அசாதாரணமான ஆயுதப் போராட்டத்தைக் கேள்விக்குறியாக்கி வெற்றிகரமாக முறியடித்திருந்தது.

இம் முறியடிப்புக்குப் பின்னர் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் அரசியல்தெரிவு சம்பந்தன் அவர்களின் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்து வருகின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முது பெரும் பிரமுகரான இவர் முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றஞ் சென்றவர் என்பது தெரிந்ததே. இப்பிரமுகர் தமிழரசுக் கட்சியின் ஏனைய தலைவர்களைப் போலவே தமிழரின் அடிமைத் தளையை அறுக்கும் மீட்பர் என்னும் முகமூடியை அணிந்து கொண்டு தமிழர் பிரச்சினையை சாதகமாக வைத்தே அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களுக்கும், உள்ளூர் சுரண்டலாளர்களுக்கும் சார்பாக இயங்கி வந்தவர் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டேயாகவேண்டும். மேலும் இவர் திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தமையானதும் அமெரிக்காவின் கழுகுக் கண்களுக்கு நல்லதொரு இரையாகவும் தனது 'உலகமயமாக்கல்' என்னும் அகோரமான பசிக்கு இச் சம்பந்தன் என்ற இரை கிடைத்தமையை பெரும் வரப்பிரசாதமாகக் கொண்டும் அவரைத் தனது திருகோணமலைக் குறிவைப்புத் தொடர்பில் அமெரிக்காவானது போதும் போதுமென்றளவுக்குப் பயன்படுத்தத் தவறியதில்லை. இதன்பெறுபேறாகத்தான் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் ஆரம்பித்த தமிழ் மக்கள் அரசியல் தெரிவின் முன்னவரான சம்பந்தன் அவர்களின் அமெரிக்காவுக்கான பயணம் தொடர்ந்து அடிக்கடி இடம்பெற்றுக் கொண்டு வந்தது. அவருடைய அப்பயணம்தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயனளிக்குமெனத்தான் தமிழ் மக்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். இன்றும் இவ்வாறே நம்பிக்கொண்டு இருக்கின்றார்கள். உண்மையில் சம்பந்தன் அவர்களுடைய அமெரிக்க விசுவாசமானது தமிழர் சுயமரியாதையை, சுயநிர்ணய உரிமையைத், தன்னாதிக்கத்தை, இறைமையை அமெரிக்கஏகாதிபத்தியவெறியர்களுக்குத் தாரைவார்த்துத் தமிழர் தாயக மீட்புக்கான தன்முனைப்பையும் 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்னும் எண்ணக்கருவை படிப்படியாக இல்லாதொழிப்பதற்கே வழிவகுக்கும். எனவே திருமலை சம்பந்தன் என்னும் வலுமிகுந்த மனிதனையும் அமெரிக்காவானது தனது திருகோணமலை மீதான குறிவைப்புக்குப் போதியளவு பயன்படுத்துகின்றதெனவே கருதமுடியும். ஆதலால் தமிழ் மக்களுக்கு நாம் இவ்விடத்தில் பிரதானமான விடயமொன்றை இடித்துரைத்து அவர்களைச் சர்வதேசிய அளவிலான விழிப்புணர்வுக்கு இட்டுச்செல்வது அவசியமானதும், அவசரமானதுமான தேவையாகவுள்ளது. அதாவது தமிழ் மக்கள் எமது உரிமைகளை இலங்கை அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அவ்வரசின் மீது அமெரிக்காவின் பாரிய அழுத்தத்தைப் பிரயோகிக்குமெனத் தவறாக எண்ணி வருகின்றார்கள். உலகளாவியளவில் அடக்குமுறையாளர்கள், ஒடுக்குமுறையாளர்கள், மேலாதிக்கவாதிகள், புறக்கணிப்போருக்குச் சார்பாகவே அமெரிக்க தேசமானது என்றுமே செயற்பட்டு வருகின்றது. அது ஒருபோதுமே அடக்கப்படுவோர், ஒடுக்கப்படுவோர், தீண்டத்தகாதோர், சுயமரியாதை, சுயாட்சி, இறைமையற்றவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டதுமில்லை. அவர்களுக்குச் சார்பாக ஒருபோதும் செயற்படப்போவதுமில்லை. தமிழரசுக் கட்சியினர் மீது தமிழ் மக்கள் தமது சுயசிந்தனையையிழந்து குருட்டாம் போக்கில் நம்பிக்கை வைத்ததன் பின்விளைவே வட்டுக்கோட்டையின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த 'தமிழீழத் தனியரசு' என்னும் தீர்மானம் கேள்விக்குறியானமையும், அத்தீர்மானத்தை வெற்றிகொண்டு தருமாறு 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ் மக்கள் ஏகோபித்த நிலையில் மிகவும் வலுவாக வழங்கிய ஆணையைத் துஷ்பிரயோகம் செய்து எதிரிகளே செய்யத் தயங்கும் துரோகத் தனத்தைத் தமிழரசுக் கட்சியைப் பிரதான நிலையில் உள்ளடக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் கூட்டமைப்பானது சிறிதளவேனும் மனவுறுத்தல் இல்லாமல் செய்து முடித்தது. இதன் விளைவாகத் தமிழ் மக்கள் வழங்கிய புனிதமான ஆணை அசிங்கப்படுத்தப்பட்டும், அலங்கோலப்படுத்தப்பட்டும் தடம்புரண்டு சென்றதோடு நல்லோர்கள் பலரும் இனித் தமிழ் மக்களின் விடுதலைக்கு இளையோரின் ஆயுதப்போராட்டம் மட்டும்தான் சரியான மார்க்கமாக இருக்குமென்று நம்பிக்கை வைத்திருந்தமையும் நாசப்படுத்தப்பட்டதோடு, ஆயுதப் போராட்டமும் அவலநிலைக்கு ஆளாகி யாருமே எதிர்பார்க்காதவிதமாகவும், எதிரிகள் எள்ளி நகையாடக்கூடியதாகவும், துரோகிகள் தூரநின்றுவேடிக்கைபார்க்கக் கூடியதாகவும் தோல்வியைத் தழுவி நம்பிக்கை வைத்திருந்து காத்துக்கிடந்த நல்ல உள்ளங்களையெல்லாம் துயரப்படுத்தியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிரதான இடத்தை வகித்த இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் முக்கிய பாகத்தை வகித்துக் கொண்டிருக்கின்றது. இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும், அவ்வமைப்பிற்குள் பிரதான இடத்தை வகித்துக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராகவும் சம்பந்தன் அவர்கள் இருந்து வருகின்றார். அவர் முன்னாளில் அக்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவிருந்து திருகோணமலை நாடாளுமன்றத் தொகுதியில் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு திருமலை சம்பந்தனெனப் பெயர் பெற்றவருமாவார்.

12ஆம் பக்கம் பார்க்க...


சுழியோடி

# தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையே தமிழ் இனத்திற்குப் பலத்தைச் சேர்க்கும்



இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அரசியல் விடுதலைக்கு அவர்களுக்கிடையில் இயங்கிக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையீனமே பிரதான காரணியாகவிளங்குகின்றது. ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அடிப்படையாகக்கொண்டு ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி ஆகிய இலங்கைத் தமிழர் காங்கிரஸ் என்பது யாவராலும் அறியப்பட்டவொன்றே. இக்கட்சியின் ஸ்தாபகக் காலப்பகுதியில் முக்கியஸ்தர்களாக விளங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டாக்டர்.ஈ.எம்.வி.நாகநாதன் ஆகியோர் ஜி.ஜி அவர்களோடு முரண்பட்டு 1949ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக்கட்சி என்னும் புதிய கட்சியை ஆரம்பித்தமையுந் தொடர்பில் மிகுந்த பின்னடைவையே கொடுத்துக்கொண்டிருந்தது. நாடாளுமன்றக் கதிரைகளைக் குறிவைத்து இவ்விரு கட்சியினரும் மேற்கொண்ட அபாரமான மோதல் எந்தவித அரசியல் அடிப்படையுமின்றி வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்களை மிகவும் பாமரத்தனமான மோதல்களிலும் ஈடுபடவைத்தது.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலின்போது இக்கட்சிகளின் சார்பாக வடக்கு-கிழக்கு மக்கள் வரிந்துகட்டிக்கொண்டு தமக்குள் மிகவும் ஆவேசத்துடன் மோதல்களில் ஈடுபடுவதோடு தடியடிகள், கத்திக்குத்துக்கள் ஆகியவற்றையும் முன்னெடுப்பதில் தீவிரம் மிக்கவர்களாகத் தோன்றினார்கள். இவ்விரு கட்சிகளின் ஒற்றுமையீனமும் இணைக்கும் நன்முயற்சியில் பெரிதும் பொறுப்புணர்வோடும், அக்கறையோடும் ஈடுபட்டிருந்தபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுமார் 12000 அளவிலான மேலதிகமான வாக்குகளினால் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட அமிர்தலிங்கம் அவர்களதும், உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுத் தொடர்ச்சியாக வெற்றிபெற்றவரான சிவசிதம்பரம் அவர்களும் எதிர்பாராதவிதமாக 1970இல் இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது தோல்வியடைந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் நாடாளுமன்றத்திற்கு வெளியில் இருந்தமை, ஞானமூர்த்தி உருவாக்கினார்.

ஞானமூர்த்தி அவர்களின் இம்முயற்சியால் வடக்கில் காலங்காலமாகத் தமக்குள் மோதிக்கொண்டிருந்த ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சி.சுந்தரலிங்கம் ஆகியோர் ஓர் அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகத்தான் இருந்தது. எனினும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் வழமையான தனது தலைக்கனம் மிக்க, மமதை வாய்ந்த சுபாவத்தினால் இவ்வமைப்பையிட்டுப் பெரிதாக அலட்டிக்கொள்வதைத் தவிர்த்து வந்ததோடு இக்கூட்டமைப்பு சார்ந்த ஒன்றுகூடல் எதிலுமோ, பிரச்சாரவேட்டை எதிலுமோ தலைகாட்டுவதையுந் தவிர்த்துக்கொண்டிருந்தார். எனினும்






தெரிந்ததே. வடக்கின் இப்பின்னணியில் கணிதத்தில் அசாதாரண புலமையைப் பெற்றிருந்த சி.சுந்தரலிங்கம் அவர்கள் அடங்காத் தமிழர் முன்னணி என்னும் அரசியல் கட்சியை ஆரம்பித்துத் தமிழர் விடுதலை தொடர்பில் பணியாற்றியும் வந்துள்ளார். இது இவ்வாறிருக்க மலையகத் தமிழ் மக்களின் அரசியல் விமோசனம் தொடர்பில் அங்கும் பல தொழிற்சங்கங்களும் அவற்றைத் தொடர்ந்து பல அரசியல் கட்சிகளும் உருவாக்கப்பட்டன. இவற்றில் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட இ.தொ.கா என்னுந் தொழிற்சங்கமே மலையகத் தமிழ் மக்களின் விமோசனத்துக்காக உருவாக்கப்பட்ட மூல அமைப்பாகும். பின்னர் இத் தொழிற்சங்கமானது அரசியற்பிரிவாக மாற்றப்பட்டதோடு மலையகத் தமிழ் மக்களின் விமோசனத்திற்காக அயராது பாடுபட்டும் வருகின்றது. அதன் பின்னர் மலையத்தில் பல தொழிற்சங்கங்களும், அரசியற்கட்சிகளும் உருவாக்கப்பட்டதோடு அங்கும் வடக்கைப் போலவே இக்கட்சிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கிடையிலும் ஒற்றுமையீனம் நிலவிவந்தது.

வடக்கின் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி என்னும் கட்சியிலிருந்து பிரிந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அபாரமான வளர்ச்சிகண்டு பொறுக்கமுடியாத ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அக்கட்சியின் மீதும், அக்கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.போன்றவர்கள் மீதும் மிகுந்த குரோதங்கொண்டவராக விளங்கினார். அவருடைய அக்குரோதம் இலங்கைத் தமிழரசுக்கட்சியினால் அந்நாளில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், மறியல் போராட்டங்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளுந்தன்மையைக்கூட அவருக்குள் இல்லாமல் செய்திருந்தது.

இவ்வாறாக வடக்கில் தமிழ் மக்களுக்குள் ஆரம்பத்தில் இடம்பெற்றிருந்த அரசியல் கட்சிகள் சார்ந்த ஒற்றுமையீனந்தான் தமிழ்க் காங்கிரஸ்-தமிழரசு மோதலாகும். இத் தமிழ்க் காங்கிரஸ்-தமிழரசு மோதலானது பாரதூரமாக வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தியதோடு அவர்களின் அரசியல் விடுதலை அசாதாரணமான மோதலும் தமிழர் உரிமைகள் பெறுவது தொடர்பில் பாரிய பின்னடைவையே உருவாக்கியது. நாடாளுமன்றத்திற்குள்ளும் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதிகள் இக்கட்சிகளுக்கிடையிலான குரோதத்தைத் தமிழர் உரிமை தொடர்பிலான நாடாளுமன்றத்துக்குள்ளானதும் வெளியிலானதுமான விடயங்களிலும் ஆளும் சிங்கள மேலாதிக்கவாதிகள் கச்சிதமாகப் பயன்படுத்தித் தமிழ் மக்களை அடக்கியாளும் தமது கைங்கரியத்தைத் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுத்துவந்தனர்.

இதனால் தமிழ் மக்களுக்குள் உள்ள நல்லெண்ணங்கொண்டோர் இக்கட்சிகள் இரண்டும் பிரிந்து நின்று செயற்படுவது தமிழர் உரிமை தொடர்பில் பயனளிக்க மாட்டாது என்பது மட்டுமல்ல அம்மக்கள் உரிமைபெற்று வாழ்வதைத் தடையுஞ் செய்யுமென உணர்ந்துகொண்டதனால் இக்கட்சிகள் ஐக்கியப்பட்டு ஓரணி நின்று வேலைசெய்யுமாகவிருந்தால் தமிழர் உரிமை தொடர்பில் எவ்வளவோ பயனளிக்குமெனவும் எண்ணினார்கள்.

இவ்வாறாக எண்ணியவர்களில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானமூர்த்தி என்பார் 1970இல் இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலையடுத்து இக்கட்சிகள் இரண்டையும் ஐக்கியப்படுத்தும் நன்முயற்சியில் பெரிதும் அக்கறையோடு ஈடுபட்டதோடு அக்கட்சிகளின் தலைவர்களையும், முக்கியஸ்தர்களையும் ஆதரவாளர்களையுந் சந்தித்துக் கலந்துரையாடி இரு கட்சிகளையும் ஐக்கியப்படுத்தியிருந்தார் என்பதுந் தெரிந்ததே. அவர் இவ்விரு வடபுலத்துப் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டையும் அவர்களின் இக்கட்சிகளை இணைப்பதற்கான முயற்சிக்கு மிகவும் உறுதுணையாகவிருந்தது.

வடக்கில் ஞானமூர்த்தி அவர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகளை இணைத்தபோது இலங்கைத் தமிழ் மக்களின் விமோசனத்துக்குத் தனிநாடு அமைப்பதொன்று மட்டுந்தான் தீர்வாக இருக்கமுடியுமென முதன்முதலில் அபிப்பிராயம் தெரிவித்தவரும் அந்நாளில் வவுனியா தேர்தல் தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவருமான சி.சுந்தரலிங்கம் அவர்களையும் கருத்திற்கெடுத்து அவர் தலைமையிலான அடங்காத தமிழர் முன்னணியையும் இக்கூட்டமைப்பில் சேர்த்ததோடு மலையகத்தின் பிரதான அரசியல் அமைப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் இவ்வமைப்புக்குள் உள்ளீர்த்துக்கொண்டார்.

எனவே தமிழர் கட்சிகள் வடக்கில் ஒன்றோடொன்று மோதிவருவது தமிழனின் அடிமைத்தளையினை அறுப்பதற்கு ஒருபோதுமே பயன்படாதெனவும் அவ்வாறாக அக்கட்சிகள் தமக்குள் முரண்பட்டு நிற்பது நிச்சயமாகத் தமிழன் மீது இறுக்கப்பட்டிருந்த அடிமைத்தளையானது மேலும் இறுக்கப்படுவதற்கே பயன்படுமெனவும் நன்குணர்ந்துகொண்ட ஞானமூர்த்தி அவர்கள் வடக்கின் பிரதான தமிழ் அரசியல் கட்சிகளான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, அடங்காத் தமிழர் முன்னணி ஆகிய கட்சிகளையும் மலையகத்தின் இலங்கைத் தொழிலாளர் கட்சியையும் ஐக்கியப்படுத்தித் தமிழர் கூட்டணி என்னும் அமைப்பை சி.சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கையின் தமிழர் அரசியல் உரிமை தொடர்பான நகர்வில் தனிநாடு அமைப்பதைத் தவிர வேறு எவ்வழியாலும் இலங்கைத் தமிழர் விடுதலை பெற முடியாதென முதன்முதலில் கருத்துவெளியிட்ட முதுபெரும் தமிழர் அரசியல் தலைவர் என்றமுறையில் தமிழர் கூட்டணி என்னும் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அவ்வமைப்பில் முன்னணி வகித்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர்களான எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோரோடு இணைந்து ஊடகங்களுக்கும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தார்.

மேலும் தமிழர் என்னும் முறையில் மலையத்தின் பிரதான அரசியல் அமைப்பான இ.தொ.காங்கிரசையும் அவ்வமைப்பின் தலைவரான தொண்டமான் அவர்களையும் (தொண்டமான் அவர்கள் அந்நாளைய மலையக அரசியல்வாதிகளில் முன்னணியில் திகழ்ந்தவர் என்பது தெரிந்ததே) மிகவும் தூரநோக்கோடும், தீர்க்கதரிசனத்தோடும் ஞானமூர்த்தி அவர்கள் கூட்டமைவில் இணைத்துங்கொண்டார். இக்கட்சிகளை ஐக்கியப்படுத்தித் தமிழர் கூட்டணி என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டபோது ஒருசில அரசியல் பூச்சியங்கள் தமிழர் கூட்டணி என்பதற்கு மாற்றீடாகச் சிங்களவர் கூட்டணி என்னும் சிங்கள மேலாதிக்க வெறிபிடித்த அமைப்பொன்று உருவாக்கப்பட்டால் தமிழரின் கதி என்னாகும் எனத் தமது குறைந்த வலுவைக்கொண்ட அரசியல் நலனைப் பாதுகாப்பதற்காக அர்த்தமற்றதும், பொருத்தமற்றதுமான பயப்பிராந்தியைக் கிளப்பிவிட்டிருந்தார்கள்.

12ஆம் பக்கம் பார்க்க...

மறவன்

# இரு பிரதான கட்சிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் காலைப்பிடிக்க வேண்டும்



நாடாளுமன்றம் புதிய தேர்தலுக்காகச் சென்றவாரம் கலைக்கப்பட்டுவிட்டது. இதனால் சிங்கள மக்களுக்குள் வாக்குவேட்டையாடுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் வழிநடத்துதலின் கீழ் இரு பிரிவினர்களும் (இவ்விரண்டு பிரிவினர்களில் ஒரு பிரிவினர்தான் ஆட்சிக்கு வரக்கூடியவர்கள் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டேயாகவேண்டும்). இப்போதே தயாராகிவிட்டார்கள். இவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவர்களில் ஒரு சாரார் மைத்திரி அரசில் இருந்துகொண்டே சில மாதங்களின் முன்னரேயே மஹிந்தவுக்கு ஆதரவாகக் கருத்துக்கள் வெளியிடவும், பிரச்சாரத்தில் ஈடுபடவும் ஆரம்பித்துள்ளார்கள். அத்தோடு முன்னர் மஹிந்த ஆட்சியில் இருந்தபோது அக்கட்சியின் அமைச்சரவையில் பங்கேற்ற லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளும் நாடாளுமன்றம் கலைக்கப்பட முதலேயே மைத்திரிக்கு எதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபட ஆரம்பித்திருந்தார்கள். தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இக்கட்சிகள் முன்னரைவிட மிகத் தீவிரமாகவே மஹிந்தவுக்கு ஆதரவாகவும் மைத்திரிக்கு எதிராகவும் பிரச்சாரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்கள். இவர்களில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார அவர்கள் மஹிந்த ஆதரவு நிலைப்பாட்டில் மற்ற இடதுசாரித் தலைவர்களைவிட முன்னணியில் திகழ்கின்றாரென்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இனிச் சிஹல உறுமய போன்ற சிங்கள பௌத்த கடும்போக்குள்ள அமைப்புக்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் கடந்த தேர்தலின்போது மைத்திரிக்கு வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க வடக்கு-கிழக்கு மக்களும் அவருக்கு வாக்களித்தமையைப் பெரிதாக எடுத்து மைத்திரி ஆட்சியினர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாருக்கு நாட்டைப் பிரித்தே கொடுத்துவிடுவார்களென விஷமத்தனமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்தும் விட்டிருக்கின்றது. இதனால் இக்கடும்போக்காளர்களின் இவ்விஷமப் பிரச்சாரம் மைத்திரி ஆட்சிக்குள் சிங்கள மக்களுக்குள் உள்ள ஒரு பகுதியினரின் வெறுப்பையுஞ் சம்பாதித்துக்கொடுத்துள்ளது. வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெருமளவில் பெற்றுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், முஸ்லீம் லீக் போன்ற இஸ்லாமிய அமைப்புக்களும், மலையகத்தின் செல்வாக்குப்பெற்ற தமிழ் அரசியல் கட்சிகளும் கடந்த தேர்தலின்போது மைத்திரிக்கு வாக்களிக்கும்படித் தத்தமது மக்களைக் கோரியமையால் சிங்கள-பௌத்த கடும்போக்காளர்கள் சிறுபான்மையினங்களின் ஆதரவையும், அனுதாபத்தையும் அதிகளவில் பெற்ற மைத்திரி தொடர்பில் வெறுப்பை உமிழ்வது இயல்பானதே.

ஐக்கியதேசியக்கட்சியின் மீது தொன்றுதொட்டே அபிமானம் வைத்திருந்துவரும் சிங்கள மேட்டுக்குடியினர் கடந்த தேர்தலின்போதும் ஐ.தே.க மீதும், ரணிலின் மீதும் கொண்டிருந்த பேரபிமானத்தினால் மைத்திரியின் வெற்றிக்காக வாக்களித்திருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் சிங்கள பௌத்த கடும்போக்காளர்களையொத்த வெறித்தனமான தமிழர் விரோத மனப்பான்மையைக் கொண்டிராதபோதும் அடிப்படையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தையே தம்மகத்தே கொண்டுள்ளவர்களாக விளங்குகின்றார்கள். இவர்களுஞ்சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிரந்தமான சிங்கள ஆதரவாளருஞ்சரி சிறுபான்மைக்கட்சிகளின் தயவையோ, சிறுபான்மை இனங்களின் குறியீடுகளைத் தம்மகத்தே கொண்ட கட்சிகளின் ஆதரவையோ பெரும்பான்மையினக் கட்சிகள் பெற்று ஆட்சி அமைப்பதை அடியோடு விரும்புவதில்லை.

எனினும் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்குள் இக்கட்சிகளினால் உருவாக்கப்படும் பலப்பரீட்சையின் காரணமாக ஒவ்வொரு தரப்பினரும் பெறும் ஆசனங்கள் அதிக வித்தியாசமில்லாமல் அமையும்போது இவ்விரு தரப்பாரும் ஆட்சி அமைப்பதற்குச் சிறுபான்மையினக் கட்சிகளின் தயவை நாடுவது தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துவிடுகின்றது. தேர்தல் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றபோதுங்கூட இருதரப்பாரினதும் சிங்கள மக்களுக்கிடையிலான வாக்கு வேட்டையின்போது பலப்பரீட்சை அண்மைய நிலையை அடியொற்றிக் காணப்படும்போதும் சிறுபான்மை இனக் கட்சிகள் தமது மக்களை யாருக்கு வாக்களிக்கச் சொல்கின்றார்களென மிகுந்த அவாவோடு எதிர்பார்த்திருப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. மைத்திரி அவர்கள் ஆட்சிக்குவந்த கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது இந்நிலை சகல தரப்புச் சிறுபான்மையின மக்களுக்குள்ளும் வியாபித்திருந்தது. வடக்கு-கிழக்கின் த.தே.கூ, முஸ்லீம் லீக், மலையகக் கட்சிகள் ஆகியவற்றின் வேண்டுதலையறிந்து சிறுபான்மை இன மக்கள் பெருமளவில் வாக்களித்திருந்தமையால் தான் தேர்தலில் மைத்திரிபால வெற்றிபெற முடிந்தது. சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் மைத்திரியின் வெற்றிக்கோ, மஹிந்தவின் வெற்றிக்கோ பெருமளவு வித்தியாசப்பட்ட வாக்குகளை வழங்க முடியாத நிலையே அமைந்திருந்தது. அவர்களால் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறாக வழங்கவும் முடியாது.

எனவேதான் நடாளுமன்றம் கலைக்கப்பட்டபின் நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எதிர்வரும் தேர்தலின்போதும் சென்ற தேர்தலில் மைத்திரிக்கு வாக்களித்த சிங்கள மக்களின் எண்ணிக்கை குறையக்கூடிய ஏதுநிலையிருந்தபோதும் ஆட்சி அமைப்பது தொடர்பில் எந்தவொரு தரப்பினருக்கும் முன்னர் சில தேர்தல்களில் இடம்பெற்றதுபோல் அறுதிப் பெரும்பான்மை கிடையாதெனவே ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது.

ஆனால் எதிர்வரும் நடாளுமன்றத்தேர்தலின் போதும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் சென்ற தேர்தலை போல ஒரு தரப்பினருக்கு வாக்களிக்கும்படி கூறினாலுங்கூட அப்போது கூறியதுபோல வலுவான தொனியோடு கூறுவார்கள் என்பது பெரும் அசாத்தியமே. இவ்வாறே இஸ்லாமியக் கட்சிகளும், மலையகக் கட்சிகளும் தமது நிலைப்பாட்டை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது பிரதிபலிக்கவேண்டியவைகளாகவுள்ளன. பெரும்பாலும் சிறுபான்மை மக்களுக்குள் அவ்வினங்களின் குறியீடுகளைக்கொண்ட கட்சிகள் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வருவதையே விரும்புகின்றமை வழமையாகியுள்ளது. இவ்வரசியல்வாதிகள் தமது மக்களை ஐ.தே.க தரப்பினருக்கு வாக்களிக்கும்படி கோராவிட்டாலுங்கூட அம்மக்கள் ஐ.தே.கவுக்கு வாக்களிக்கும் இயல்பான சுபாவத்தினையும் அம்மக்களுக்குள் இவ்வரசியல்வாதிகள் எப்போதோ தோற்றுவித்தும் விட்டார்கள்.

எது எப்படியிருந்தபோதும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் சிங்கள மக்களுக்குள் அண்மித்த நிலையில் பலப்பரீட்சையுடன் ஆசனங்களைப்பெறும் இரு தரப்பினருமே வடபுலத்தின் வெகுஜன அபிமானத்தைப் பெறவிருக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் காலைப் பிடிக்காமல் பதவிக்கு வருவது (ஆட்சி அமைப்பது) கடினமானவொன்றாகவிருக்குமெனத் தான் கருதவேண்டியுள்ளது.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சகல வழிகளிலும் சிங்கள மக்களின் வாக்குகள் பல்வேறு தரப்புக்களாக சிதறுண்டு போகும் வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆளுகை மிக்க அங்கத்தவர்கள் பலர் மஹிந்த இனி ஒரு போதும் பதவிக்கு வரமாட்டாரெனவும், அவரைத் தேர்தலில் போட்டியிடுவதையே முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுமாறும் நெருக்குவாரங்களை மிகவும் வலுவான நிலையில்கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இந்த உள்ளகக் கட்சி முரண்பாடுகளும் தனி நபர் காழ்ப்புணர்வுகளும் சிங்கள மக்களின் வாக்குகள் ஒரு முகப்பட்ட நிலையில் சிதறுண்டு போகவேண்டிய நிலையைத் தோற்றுவிக்கும். மேலும் ரணில் அவர்கள் இனி மஹிந்த அவர்களால் ஒருபோதும் ஆட்சி அமைக்க முடியாது எனக்கூறி மஹிந்த அதிருப்தியாளர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை உசுப்பேற்றிவிடும் கைங்கரியத்திலும் ஈடுபட்டுள்ளார். அத்தோடு இடதுசாரி அரசியல்வாதிகளான ஸ்ரீதுங்க ஜயசூரிய, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) ஆகியோர் தனித்துப் களமிறங்குவதாகவும் முடிவுசெய்துள்ளார்கள். மேலும் முற்போக்கு முகமூடியணிந்து அண்மையில் உருவாக்கப்பட்ட கட்சியின் மலையகக் கனவான்களும் ஐக்கிய தேசியக்கட்சியோடு இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள். இவர்களோடு இணைந்து நேரத்துக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு தமது நிறம்மாற்றிப் பச்சோந்தி அரசியல் செய்யும் மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மஹிந்த அரசில் அமைச்சுப் பதவிகளை அலங்கரித்த சில கொள்கையற்ற மலையக அரசியல்வாதிகளும் ஐ.தே.கட்சிக்கும் ரணிலுக்கும் பகிரங்கமாக வக்காலத்து வாங்க ஆரம்பித்துள்ளார்கள். இந்நிலையில் முஸ்லீம் லீக் போன்ற இஸ்லாமியக் கட்சிகளும், ஐ.தே.கவுக்கும் ரணிலுக்கும் ஆதரவாக தேர்தலில் போட்டியிடுவார்களென நம்புவதற்கு இடமுள்ளது.

பொதுவாகக் கூறின் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறுபான்மை இனங்களின் குறியீடுகளைக் கொண்ட மலையகக் கட்சிகளும், இஸ்லாமியக் கட்சிகளும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ரணிலுக்கும் சார்பாக மிகவும் உரத்துக் குரலெழுப்பத் தொடங்கியுள்ளார்கள். இக்கட்சிகளின் தமிழ்க் குறியீடுகள் போலியானவையெனவும் அவை உண்மையாகவே ஐக்கிய தேசியக்கட்சி சார்பானவை என்பதும் ஏற்கனவே தெரிந்ததே. இக்கட்சிகள் தவிர்ந்த வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு போன்ற அமைப்புகளும் நீலக்கட்சியை முற்றாக வெறுத்துப் பச்சைக் கட்சியின் மீது ஓரளவாவது அபிமானம் கொண்டவர்களாக உள்ளார்கள்.

எனவே எதிர்வரும் தேர்தல் தொடர்பில், தென்னிலங்கையில் ஆட்சி அமையும் விடயம் தொடர்பில் அவர்கள் அவசரப்பட்டுக் கருத்து எதுவுமே தெரிவிக்காமலிருப்பது அவர்களைப்பொறுத்து நியாயமானதே. எனினும் இக்கூட்டமைப்பார் நடைபெறவிருக்கும் தேர்தலில் வடக்கு-கிழக்கில் வெற்றிபெறுவது நிச்சயமாக உள்ள நிலையில் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் அங்குள்ள எந்தவொரு அணியினரையும் போதியளவு பலத்துடன் ஆட்சி அமைப்பதற்கென தெரிவுசெய்யும் நிலை இல்லாமல் உள்ளது.

சிங்கள மக்களின் அபாரமான வாக்குச் சிதறல் எந்தவொரு ஆட்சியமைக்கக்கூடிய அணியையும் பலமான நிலையில் ஆட்சி அமைக்கக்கூடிய நிலையை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தோற்றுவிக்காது. மாறாக மட்டுமட்டான வாக்குப் பலத்துடன் பலப்பரீட்சை செய்யக்கூடிய நிலையில் தேர்தலில் தெரிவுசெய்யப்படும் நீல அணியினரும், பச்சை அணியினரும் அதைத் தொடர்ந்து நகர்த்திச்செல்வதற்கு வடக்கு-கிழக்கில் வெற்றி வாய்ப்பை எப்போதுமே நிச்சயமாகக்கொண்டுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் காலைப் பிடிக்கவேண்டிய நிலைக்கே ஆளாக வேண்டும்.

தேர்தல் முடிவுகள் பலப்பரீட்சைகளின் பாற்பட்டதாக இருக்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி ஆகிய இரு கட்சிகளும் ஆட்சியமைப்பதற்குத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் காலைப் பிடிக்கும் நிலைக்கு ஆளாகும்போது கூட்டமைப்பார் எப்பக்கம் தமது தயவு தாட்சணையைப் பிரயோகிப்பார்கள் என நோக்குவதும் இன்றியமையாதவொன்றே.

மலையகத் தமிழ்க் குறியீடுகளைக்கொண்ட கட்சிகளும், இஸ்லாமிய கட்சிகளும் தற்போதே ஐ.தே.கட்சிக்குச் சார்பாக குரலெழுப்பி வருகின்றமையைப் பின்னணியாகக்கொண்டே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பலப்பரீட்சையின் பாற்பட்ட இரு கட்சிகளும் காலில் விழுவது தொடர்பில் முடிவெடுக்க முனைவார்கள் என்பது நிஜமாகவிருக்கின்றபோதும் அன்றைய காலகட்டத்தில் ஆட்சி அமைப்பதற்குத் துணைபோனது போல தற்போதும் வலுவான நிலையில் துணைபோவது அசாத்தியமே.

எனினும் காலைப்பிடிக்கும் ஒரு விடயத்திலாவது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் தமிழர் நலன் சார்ந்து இராஜதந்திரக் காய்களைநகர்த்த முன்வருவதுதான் அரசியல் சாணக்கியமாகும்.

08ஆம் பக்கம் பார்க்க...

கருணைக் கண்ணன்

# பிராந்தியச் செய்திகள்

மஸ்கெலிய பிரதான வீதியிலுள்ள 125 இலக்க வியாபாரஸ்தலத்தில் மின்ஒழுக்கு காரணமாக காலை 10 மணியளவில் மேல் மாடியில் தீ பற்றியது. மஸ்கெலிய பொலிசார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குகொண்டுவந்தனர். மேல்மாடியிலிருந்த உடமைகள் தீக்கு இரையாகிவிட்டன. இது சம்பந்தமாக ஹட்டன்-மஸ்கெலிய பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.




தகவலும் படங்களும்:- செ.தி.பெருமாள், மஸ்கெலியா.

## புதுக்குடியிருப்பில் 19 கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்கி வைத்தார் வைத்திய கலாநிதி சி.சிவமோகன்

02.07.2015 அன்று புதுக்குடியிருப்பில் விவசாயத்தை மேற்கொள்ளக்கூடிய பிரதேசங்களைத் தெரிவுசெய்து விவசாயத்தை மேற்கொள்ளும் 19 கிராமங்களைச் சேர்ந்த குழுக்களுக்கு விவசாய செயற்திட்டத்தை மேம்படுத்துவதற்காக பிரமாண அடிப்படையிலான முலதன நன்கொடையின் கீழ் விவசாய உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினைக் காணலாம்.





கடந்த ஒரு மாத காலமாக இழுபறி நிலையில் இருந்த புதுக்குடியிருப்பு அங்காடி வரி அறவிடும் சிக்கல்கள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் அவர்களின் தலையீட்டில் முடிவுக்கு வந்துள்ளது. குறித்த முரண்பாடு தொடர்பில் ஏற்கனவே மக்களின் கோரிக்கைக்கு அமைய, சந்திப்பொன்றை நிகழ்த்திய ரவிகரன் அவை தொடர்பான மக்களின் கருத்துக்களைக்கேட்டு உரிய அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் மேற்படி முரண்பாடானது சுமுக நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அறியவருகையில், புதுக்குடியிருப்பு அங்காடி வியாபாரிகள் தமக்குரிய வரி அறவீடுகள் அளவுக்கு அதிகமாக உயர்த்தப்படவுள்ளதாகவும் அதனால் தமது நாளாந்த வருமானம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்படும் என்றதொரு முறைப்பாட்டை மதிப்புக்குரிய வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடம் முன்வைத்திருந்தனர். அதன் அடிப்படையில் குறித்த பகுதியில் மக்கள் சந்திப்பை ஏற்படுத்திய ரவிகரன் அது தொடர்பிலான மக்களின் கருத்துக்களை கேட்டிருந்தார்.

அதன் பின்னர் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினருடன் இது தொடர்பில் நேரில் கலந்துரையாடிய ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும் இது தொடர்பில் தனது கருத்துக்களை முன்வைத்ததோடு அதன் தொடர்ச்சியாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமும் தொடர்புகொண்டு மக்களின் கோரிக்கைகள் தொடர்பிலான நியாயப்பாட்டை எடுத்துரைத்துள்ளார். தற்போதய சந்தைச்சூழலில் மேலதிக வரி அறவீடு வியாபாரிகளின் நாளாந்த வருமானத்தை பாதிக்கும் என்பதை சுட்டிக்காட்டிய ரவிகரன் புதிய அங்காடித்தொகுதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கட்டப்படும் வரை வரியில் மேலதிகஅறவீடுகளைதவிர்க்கவேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்திருந்தார்.

குறித்தவிடயங்கள்ஆராயப்பட்டுரவிகரன் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் புதிய அங்காடிக்கட்டடங்கள் கட்டப்படும் வரையில் மேலதிக வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படாது என்பதை தெரிவித்திருந்தார். 2015-07-01 அன்று புதுக்குடியிருப்பு சந்தைப்பகுதியில் மக்கள் சந்திப்பை ஏற்படுத்திய ரவிகரன் குறித்த தகவலை அவர்களுக்கு தெரிவித்ததோடு அங்காடிப்பகுதிக்கான மின்சார இணைப்பு உள்ளிட்ட பல்வேறு குறைகள் தொடர்பிலும் மக்களுடனான தனது கலந்துரையாடலை முன்னெடுத்தார்.

மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மகள் மற்றும் மகளின் பிள்ளை ஆகியோர் மடுத் திருத்தல ஆடித் திருவிழாவிற்குச் சென்றுவிட்டு, யாழ்ப்பாணம் நோக்கி முச்சக்கரவண்டியில் பயணம் செய்துள்ளனர். இவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியும் மன்னார் நோக்கி பயணித்த வானும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 02ஆம் பக்கத் தொடர்ச்சி...

வாக்களித்து வெற்றிபெறவைத்தார்கள் என்றால் முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்டாலும் தமிழ்த்தேசியம் சாகவில்லை என்பதையே அத்தேர்தல் எடுத்துக்காட்டியது. அதன்பின்னர் மஹிந்த அரசானது பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எம்மீது புலனாய்வாளர்களை ஏவிவிட்டு நாங்கள் செல்லும் இடமெல்லாம் எங்களுக்கும், மக்களுக்கும் துன்புறுத்தல்களைச்செய்து குறிப்பாக சத்துருக்கொண்டான், கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவந்தபொழுது பல்வேறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தோம்.

இந்த நான்காவது பொதுத் தேர்தல் என்பது ஜனாதிபதி மாற்றத்திற்குப்பின்னர் ஒருபடி நாம் முன்னேறிச்சென்றிருக்கின்றோம். இந்த 65வருட காலத்திற்குள் விடுதலைப்புலிகளின் தியாகம் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டு தமிழ் மக்களுக்கான சிறந்த தீர்வினை பெற்றிருக்கின்றது. அதுமட்டுமல்லாது வடகிழக்கு அரசியல் சிறந்த முறைக்கு மாற்றம் பெற்றிருக்கின்றது. சர்வதேச மயப்படுத்தப்பட்ட இந்நிலையில் ஒரு அரசியல் தீர்வினைப்பெறவேண்டிய தீர்வாக வடகிழக்குத் தேர்தல் இருக்கின்றது. இந்த தேர்தலின் மூலம்தான் அதனைப் பெறவிருக்கின்றோம். ஏனென்றால் எந்த அரசாங்கம் வெற்றியீட்டுகிறதோ அந்த அரசாங்கம்தமிழ்மக்களுக்கானதீர்வினை வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் நிலைக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மாற்றம் பெறவேண்டும். வடகிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பின்னால் இருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டும் அளவிற்கு இந்தத் தேர்தல் இருக்கவேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை தான் நாங்கள் தற்பொழுது முன்னெடுத்திருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## 04ஆம் பக்கத் தொடர்ச்சி...

சிங்கள விவசாயிகள் கிழக்கிலங்கையில் அடாத்தாகப் பிடிக்கும் வயல் நிலங்கள் அவர்களின் பயிர்ச்செய்கைக்கு உட்படுவதோடு அவர்களுக்குச் சொந்தமாகியும் விடுகின்றன. இந்த அவலத்தை அகற்றுவதற்கு எவராலுமே இயலாத ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை தான் தற்போது கிழக்கிலங்கையில் வலுவாக வேரூன்றியுள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுமாகவிருந்தால் மேற்றரப்பட்ட அவலங்களை துப்பரவாக அகற்ற முடியாவிட்டாலுங்கூட ஏகோபித்த நிலையில் எதிர்ப்பையாவது காட்ட முடியுமென ஆதங்கப்படுவதில் அர்த்தமுண்டு.

இவ்வவலம் கிழக்கிலிருந்து வடக்குக்கும் அதே பாணியிலேயே பரவிக்கொண்டிருக்கும்போதும் அதையுந் தடுத்து நிறுத்துவார் எவருமேயில்லை. யாராலுமே தடுத்துநிறுத்தவும் முடியாது. எனவே வடக்குக் கிழக்கின் சிங்களக் குடியேற்றங்கள், தமிழர் தாயகம், சுயாட்சியோடு இயைந்ததாகப் பாதுகாக்கப்படும்வரை எவராலுமே தடுத்து நிறுத்த முடியாத ஒன்றாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## மடு அன்னையின் ஆடித் திருவிழா! லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பு

மன்னார் மடு அன்னையின் ஆடி திருவிழா திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்தத்திருவிழாவின் இறுதிநாளில்காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ், சிங்களம், திருச்சபையின் மொழியாம் லத்தீன் ஆகிய மொழிகளில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மூன்று மறைமாவட்ட ஆயர்களுடன், நூற்றுக்கு மேற்பட்ட அருட் பணியாளர்களும் பல ஆயிரக்கணக்கான பக்தர்களும் இந்தத் திருவிழாவில் கலந்து கொண்டனர். யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, சிலாபம் ஆயர் வலன் மென்டீஸ் ஆண்டகை, அநுராதபுரம் ஆயர் நோபட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் இணைந்து இந்தத் திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இதைத்தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூப திருப்பவனி ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. இத்திருப்பலியில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்து வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.



## 05ஆம் பக்கத் தொடர்ச்சி...

அந்நாளிலேயே அமெரிக்காவானது தமிழ் அரசுக் கட்சியானது தமிழர் உரிமைகள் தொடர்பில் உருவாக்கப்பட்ட கட்சியாகவிருந்தபோதுங்கூட அது தமிழர் உரிமைகளைப் பெறுவதில் இலங்கையின் பெரும்பான்மையினத்தின் முதலாளித்துவ நலன் சார்ந்ததும் தமது ஏகாதிபத்திய நலன் சார்ந்தும் செயற்பட்டு வருகின்றதென நன்கு புரிந்துகொண்டதனாலும் அவர்களுக்கு அவ்வாறு தமிழரசுக் கட்சியின் மீது புரிந்துணர்வு உருவானதால் அன்றைய தமிழரசுக் கட்சியின் திருமலை சம்பந்தன் தான் இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரெனவும், ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்குப் பின்னர் புதுப்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவரெனவும் விளங்கியமையை மையப்படுத்தி இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அந்நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகக் கச்சிதமாக நடித்துத் தமிழ் மக்களையும் நம்பவைத்து சம்பந்தன் அவர்களை அடிக்கடி தமது நாட்டுக்கு வரும் விருந்தாளியாகவே கொண்டும் இருந்தார்கள்.

மஹிந்தவோடு நாடாளுமன்றப் போசனசாலைக்குள் குசுகுசுத்ததன் விளைவாக கொழும்புக் கனவானும், இடதுசாரியாகவிருந்து, இனவாதியாகவும் மாறிவிட்ட வாசுதேவ நாணயக்காரவின் சம்பந்தியுமான விக்கினேஸ்வரன் அவர்களை முதலமைச்சராக்கிய சம்பந்தன் அவர்கள் தனது நலனுக்கு அன்னார் மிகவும் உகந்தவரெனக் கருதிப் பயன்படுத்துகின்ற செயற்பாடு வியப்புக்குரிய ஒன்றாகவிருக்கவில்லை.

எனவே தமிழ் மக்கள் தமது சுயத்தின் பாற்பட்டு நின்று அரசியலைத் தாமே கற்றுக்கொண்டு இதுவரையில் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவிருந்து குருட்டாம்போக்கில் எந்தக் கொம்பு முளைத்தவர்களையும் பின் தொடர்ந்து சென்றமைபோல் செல்லாமல் விழிப்புணர்வோடு தற்காத்து நின்று திருகோணமலையின்மீதான அமெரிக்காவின் குறிவைப்புக்குச் சம்பந்தன், விக்னேஸ்வரன் போன்றவர்களின் அனுசரணையை மிகவும் விளக்கமாகத் தெளிவுபடுத்தி அமெரிக்காவின் அக்குறிவைப்பை இல்லாதொழிக்கக் காலதாமதமில்லாமல் உடன் முன்வரவேண்டும்.

## 07ஆம் பக்கத் தொடர்ச்சி...


முன்னரைப்போலல்லாது மிகவும் வலுவான நிலையில் தமிழர் சார்பான வேண்டுதல்களை ஆட்சி அமைப்பதற்கான அனுசரணையை வழங்கும்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பார் முன் வைப்பதோடு மிகவும் அவதானத்தோடும், தீர்க்கதரிசனத்தோடும், தூரநோக்கோடும் செயற்படவும் வேண்டும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பார் எதிர் வரும் தேர்தலில் ஆட்சி அமைப்பதற்காகத் தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் தமது காலைப்பிடிக்கின்றார்களே என்னும் மமதையின் பாற்பட்டுக் கண்மூடித்தனமாகச் செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

எனவே எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலின்போது இரண்டு பிரதான கட்சிகளும் காலில் விழும் வீச்சு எவ்வளவுதான் வலுவாக இருந்தாலுங்கூட எவ்விதத்திலும் சோரம் போகாமல் கட்சியினதும், தமிழ் மக்களினதும் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் கைவிடாமல் புத்திசாலித்தனமாக முடிவுகளை எடுக்க முன்வரவேண்டுமெனக் கோரி அவர்களை எந்நேரமும் அரசியல் விழிப்புணர்வோடு இயங்குமாறு பார்த்துக்கொள்வது அறிவோர் செயலாகும்.




## திறமையை நிரூபிக்க பெண்ணாக மாறப்போகும் சிவகார்த்திகேயன்



ஒரு இடத்தில் இருந்தாலே கலகலப்பிற்கு பஞ்சம் இருக்காது, இவரின் மிகப்பெரிய பலமே கொமடி தான், ஆனால், அதுவே இவரின் பலவீனம் ஆகியுள்ளது.ஏனெனில் சிவகார்த்திகேயன் என்றாலே கொமடி மட்டும் தான் செய்வார், சிரமப்பட்டு தான் நடிக்கமாட்டார் என ஒரு பேச்சு உள்ளது.

இந்தகருத்தை முறியடிக்கும்விதத்தில்தன் அடுத்த படத்தில் பெண் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளாராம். மேலும், இதற்காக தான் ஐ படத்தின் மேக்கப் கலைஞரை அழைத்து வந்தார்களாம்.

## ஐ படத்தை மிஞ்சும் புலி



தமிழ் சினிமாவில் இதுவரை வந்த படங்களில் மிக பிரமாண்டமாக கருதப்பட்ட படம் எந்திரன், ஐ தான். இப்படங்களின் இசை வெளியீட்டு விழா எப்படி நடந்தது என்பதை நாங்கள் சொல்லி தெரிய வேண்டியது இல்லை. இந்நிலையில் விரைவில் புலி படத்தின் இசை வெளியீட்டு விழா நடக்கவுள்ளது.

இவ்விழாவை சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடத்த படக்குழு முடிவெடுத்துள்ளதாம். ஐ படத்தின் இசை வெளியீட்டு விழாவை விட மிக பிரமாண்டமாக நடக்கவிருக்கின்றதாம் புலி படத்தின் இசை வெளியீட்டு விழா.

## விஜய்-அஜித்தை ஓரங்கட்டி மாதவன் சாதனை



மாதவனை தமிழ் திரையில் பார்த்து கிட்டத்தட்ட 3 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது, இந்நிலையில் இவர் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த பொலிவூட் படமான Tanu weds Manu returns மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.இப்படம் தற்போது வரை இந்தியாவில் மட்டும் ரூ.150 கோடி வசூல் செய்துள்ளது. வெளிநாட்டு வசூல் விவரங்களை பார்த்தால் ஆக மொத்தம் ரூ.225 கோடி வசூல் செய்துள்ளதாக அவரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

மேலும், இப்படத்தின் தொலைக்காட்சி உரிமம் இன்னும் விற்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதை வைத்து பார்க்கையில் விஜய், அஜித் போன்ற தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்கள் மாதவன் சாதனையை எட்டிப்பிடிக்க இன்னும் பல வருடங்கள் ஆகும்.

## ராதிகாவிற்கு பதிலடி கொடுத்த இயக்குனர்



ராதிகா சமீபத்தில் ஒரு இசை வெளியீட்டு விழாவில் பேசியது தான் தற்போது வைரஸ். உயிரே உயிரே படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடந்தது. இதில் ராதிகா கலந்துகொண்டு படத்தை பற்றி பேசாமல் இன்றைய இளம் நடிகர்களிடம் ஒற்றுமை இல்லை என ஏதேதோ பேசினார்.

இதை இப்படத்தின் இயக்குனர் ராஜசேகர் கடுமையாக விமர்சித்துள்ளார். படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்கு வந்து படத்தை பற்றி பேசாமல், இவரின் அரசியல் பிரச்சினை பற்றி தேவையில்லாமல் பேசியுள்ளார் என தன் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

## கடைசி நேரத்தில் மாரி படத்துக்கு ஏற்பட்ட சிக்கல்



சமீபத்தில் தனுஷ் நடிப்பில் வெளியான மாரி ட்ரைலர் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வந்தது. இப்படம் இம்மாதம் ஜுலை 17 ம் திகதி ரிலீஸ் செய்ய திட்டமிட்டு இருந்தனர். அதே திகதியில் சிம்புவின் வாலு படமும், சிவகார்த்திகேயனின் ரஜினி முருகன் படமும் வெளிவருகிறது. இதனால் மாரி ரிலீஸ் ஆகுமா? ஆகாதா என்ற சந்தேகம் ரசிகர்களிடைய எழுந்தது.

தற்போது வந்த தகவலின் படி மாரி படம் இப்போட்டியிலிருந்து விலக்கியதாக கூறப்படுகிறது. திடிரென்று கடைசி நேரத்தில் ஏன் மாரி தள்ளி போகிறது என்று விசாரித்தால் படத்தில் இன்னும் சில காட்சிகளை மீண்டும் படமாக்க வேண்டியிருப்பதால் தான் இந்த தள்ளிப்போக வாய்ப்பு உள்ளது என்கிறார்கள்.

## விவேக் வைத்த கோரிக்கை

நடிகர் விவேக் நடித்த பாலகாட்டு மாதவன் திரைப்படம் தமிழகமெங்கும் வெளியாகியுள்ளது. அதே சமயம் கமல் நடிப்பில் பாபநாசம் படமும் வெளியாகியுள்ளது. இதனையொட்டி மக்களிடைய நடிகர் விவேக் ஒரு கோரிக்கை வைத்துள்ளார்.

அதாவது பாபநாசம் வரும் போதே பா.மாதவனும் வருகிறது. யானையின் 'கால்களுக்கு இடையில் ஒரு கன்றுக்குட்டி போல. இது துணிச்சல் தான். ஆனால் வேறு வழி இல்லை. பண்டிகை நாட்களில் வரவேண்டிய பட்டத்து யானை திடீரென்று முன் அறிவிப்பின்றி வந்துவிட்டது. இருப்பினும் இது நாள் கொடுத்த ஆதரவை இனியும் கொடுத்து கன்றுக்குட்டியையும் ஆதரிக்க வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



## சந்தேகப்பட்டு சித்ரவதை செய்த மனைவி



அலிபாபா, கற்றது களவு, யாமிருக்கபயமே போன்ற படங்களில் நடித்தவர் கிருஷ்ணா. இவர் இயக்குனர் விஷ்ணுவர்தனின் தம்பியும் கூட, இவர் நடிப்பில் விரைவில் யட்சன் திரைப்படம் வரவிருக்கின்றது. இந்நிலையில் சமீபத்தில் இவர் கூறிய தகவல் ஒன்று அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதில் தன் மனைவி தினமும் சந்தேகப்படுவதாகவும், இதனால் பிரச்சினை நாளுக்கு நாள் பெரிதாகி கொண்டே போவதாகவும் கூறியுள்ளார். இதுமட்டுமின்றி படப்பிடிப்பு முடிந்து இரவு தாமதமாக வீட்டிற்கு வரும் போது கதவை கூடத் திறக்க மாட்டார், பல நாட்கள் நண்பர்கள் வீட்டில் தான் தங்கினேன், இதனால் தன் மனைவியுடன் இனி வாழ முடியாது என்று சென்னை குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

## ஷங்கரின் அடுத்த படம் ஆரம்பம்



இந்தியசினிமாவின்பிரமாண்ட இயக்குனர் என்று அழைக்கப்படுபவர் ஷங்கர். இவர் ஐ படத்திற்கு பிறகு அடுத்து எப்போது படம் இயக்குவார் என அனைவரும் காத்திருந்தனர்.இந்நிலையில் சமீபத்தில் தமிழகத்தின் முன்னணி நாளிதழ் ஒன்று இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது. இதில், ஷங்கர் அடுத்து எந்திரன்-2 படத்தை தான் இயக்கவுள்ளார்.

இப்படத்தில் ஒளிப்பதிவாளர் ரத்னவேலு, இசை ஏ.ஆர். ரகுமான், ஹீரோ சொல்லவா வேண்டும் சூப்பர்ஸ்டார் தான். இப்படம் 2016ல் தொடங்கப்படவுள்ளது, இருந்தாலும் கிராபிக்ஸ் வேலைகள் தற்போதே ஆரம்பித்துவிட்டதாம்.

## தமிழ் சினிமாவை பெருமைப்படுத்திய ராஜ மௌலி



இந்திய சினிமாவில் ஷங்கருக்கு பிறகு பிரமாண்டபடங்களை தொடர்ந்து இயக்கி வருபவர் ராஜ மௌலி. இவர் இயக்கத்தில் விரைவில் பாகுபலி படம் உலகமெங்கும் சுமார் 4000 திரையரங்குகளில் வெளிவரவிருக்கின்றது. இந்நிலையில் பொலிவூட் இயக்குனர் கரணுடன் ஒரு நேர்காணலில் ராஜ மௌலி சமீபத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்களை எப்படி பார்க்கிறீர்கள் என அவர் கேட்டுள்ளார்.அதற்கு ராஜ மௌலி 'பெரிய வித்தியாசம் ஏதும் இல்லை, கலாச்சாரம் தான் மாறுகின்றது, ஆனால், தமிழில் பல நல்ல தரமான படைப்புகள் வருகின்றது, அதே நேரத்தில் அது கமர்ஷியலாகவும் ஹிட் அடிக்கின்றது' என கூறியுள்ளார்.

## 14 வயது பெண்ணை கற்பழித்த நாயகன்



இந்திய சினிமாவின் புது முயற்சியாக நடனத்தை மையமாக கொண்டு வெளிவந்த படம் ABCD. இப்படத்தின் தொடர்ச்சியாக ABCD-2 சமீபத்தில் வெளிவந்தது. இப்படம் ரூ.100 கோடி வசூல் செய்து விட்டதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் இப்படத்தில் நடன கலைஞராக நிலிஷ் என்பவர் மனநலம் சரியில்லாத பெண்(14) ஒருவரை கற்பழித்துள்ளார்.

இந்த விஷயம் அறிந்த காவல்துறையினர் உடனே இவரை கைது செய்துள்ளனர். மேலும், விசாரணை நடந்து வருவதாக கூறப்படுகின்றது. இந்த செய்தி அந்த படக்குழுவினர்கள் மட்டுமின்றி திரையுலகத்தினர்பலரையும்அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## நந்திதாவுக்கு இன்ப அதிர்ச்சி



சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்திருக்கும் புலி படத்தில் நாயகி நந்திதா ஒரு முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். சமீபத்திய ஒரு பேட்டியில் நந்திதா, விஜய் அவர்களுடன் நடித்தது ஒரு புது அனுபவமாக இருந்தது, அதோடு என் கனவும் நனவாகிவிட்டது. எனக்கு முதலில் அவருடன் இணைந்து நடிப்பதற்கு கொஞ்சம் பயமாக இருந்தது. ஆனால் அவரே என்னிடம் வந்து பேசி என் பயத்தை எல்லாம் போக்கியுள்ளார்.

அதோடு விஜய், எதிர்நீச்சல் படத்தில் என் நடிப்பு பிடித்திருந்ததாக கூறியிருந்தார் என்று கூறினார்.புலி படத்தின் படப்பிடிப்பு வேலைகள் அனைத்தும் முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## இளையராஜா என்னை வேண்டாம் என்று கூறிவிட்டார்– மதன் கார்க்கி

தமிழ் சினிமாவில் தற்போது முன்னணி பாடலாசிரியர் மதன் கார்க்கி. இவர் முன்னணி இசையமைப்பாளர் எல்லோருடனும் பணியாற்ற, இன்னும் இளையராஜாவுடன் மட்டும் பணியாற்ற வில்லை. இது குறித்து பிரபல நாளிதழ் ஒன்றில் அவர் கூறுகையில் 'ஏற்கனவே இரண்டு படங்களுக்கு எனக்கு வாய்ப்பு வந்தது, அவருடன் பணியாற்ற ஆனால் அவர் என்னுடன் பணியாற்ற முடியாது என்று கூறிவிட்டார்.என் அப்பா மீது உள்ள கோபத்தை என்னிடமா காட்ட வேண்டும்?' என்று உருக்கமாக கூறியுள்ளார்.

# கவிதைப் பூங்கா

## என் அம்மாவுக்கு...

அம்மா
இடிவிழுந்த நெஞ்சில்
மீண்டும் ஒரு
இடி
உன்
மரண சிலுவையை
சுமக்க முடியாமல்
விழுந்துபோனேன்
நான்

என்
இதயக்கோப்பை
தண்ணீரால் நிரம்பி
திணறி அடித்தது
மூச்சு
நான்
அம்மா என்று கதற
உன்விழியில் இருந்து
ஓடிவந்தது
கண்ணீர்

உனக்குள்
எத்தனை வலிகளை
சுமந்திருக்கிறாய்
நீ
உன்
பிள்ளைகளை துடிதுடிக்க
வலைஞர்மடத்தில்
கொன்றது யுத்தக்
கழுகு

நான்
தண்ணீர் கொடுக்குமுன்
எங்களுக்கு கண்ணீர்
தந்துவிட்டு
வவுனியா
வைத்திய சாலையில்
மீளாத்துயில் அடைந்தார்
அம்மா

எமக்கு
சோறூட்டி அறிவூட்டி
ஆயிரத்திற்கும் மேல் நூல்படித்த
அறிவாளி
அண்ணன்
போர்
தந்த சோகங்களை
தாங்கமுடியாமல்
விழிமூடிப்போனானே
பத்தொன்பதாவது வலயம்
இராமநாதர்
முகாமில்

இப்படி
எத்தனை சோகங்களை
தமிழர்களின் வாழ்க்கை
புத்தகத்தில் எழுதி
விட்டு
ஜெனிவா
அறிக்கையையும் பொய்
என்று சொல்லுதம்மா
யுத்தம்

உன்
பிரிவுத்துயரில்
காலச்சக்கரம் சுழன்று
மூன்று வருடங்கள்
நேற்று
நடந்தது அல்ல
இன்று நடந்தது போல
இருக்கிறது
எல்லாம்

அம்மா
அழுதுபுரண்டாலும்
மாண்டார் மீண்டும்
திரும்பார் என்பது பொய்
மண்
அல்ல மனிதன் தான்
மண்ணை ஜெயிப்பான்
என்பது மெய்
இதற்கு
தேவகுமாரன் சாட்சி

உயிரோவியன்

## காதல்

உன்னைக் காதலிப்பவர்களை விட
உன் உள்ளத்தைக் காதலிப்பவர்களிடம் இருப்பதே
உண்மையான காதல்!

சு.தேவா
செட்டிகுளம்

## கானல் நீர் போர்த்திய கனவுகள்

இந்த வெண் திரை
கறுப்பு மை தெளித்து கலங்கிக் கிடக்கிறது
உணர்வுகள் பீறிட்டு
வெளிக்க விடும் பொழுதுகளெல்லாம்
கறுப்புக் கறை கழற்றப்படாமல்
படிந்தே விழிக்கிறது...!
தூரம் செல்லச்செல்ல
வெறுமையுடன் போர்த்திப் போர்த்தியே
கனவுகளெல்லாம் – இந்த
கறை ஆட்கொண்டு
அமாவாசையாக
இருள் சூழ்ந்தே கிடக்கிறது ...!
முன்பு விதைத்த
துளியொன்றின் வளம் செழித்து – அதை
விருட்சமாய் வளர்த்தெடுக்க
அமாவாசையையும் பூரணையாய்
மனதுக்குள் புதைத்து
கதறுவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை
அதனால்தான் கறுப்படிக்கப்பட்டும்
உண்மைகூட – இன்னும்
ஊமையாகவே உறங்குகிறது...!
உணர்வுகள் இன்னும் உயிரோடுதான்
உடுத்துக் கிடக்கிறது
மனதில் பதியப்பட்ட – இந்த
கறுப்புப் புத்தகம்
என்றும், எங்கும் பாடம் தரும் – ஆனால்
இன்றைய பொழுதுகளின்
ஒவ்வொரு விடியலும் தோற்றே போகிறது
உணர்வுகள் வெடித்துச் சிதறுண்ட
கானல் நீராக...!

இலையா தண்டா
என்பது தெரியாமலே
பூப்பூத்து விட்டன
சப்பாத்திக்கள்ளி

பூக்களைக் காணாமலே
காயா என்பது தெரியாமலே
காய்த்துக்கிடக்கின்றன
நுங்குகள் கூட்டம்

பறவையா பாலூட்டியா
என்பது தெரியாமலே
தலைகீழ் தவமியற்றுகின்றன
வெளவால் கூட்டம்

தாவரமா விலங்குகளா
என்பது தெரியாமலே
வெண்குடை வேந்தனாக
மரத்தில் முளைத்திருக்கும்
காளான் கூட்டம்

உனக்குள் நானா
எனக்குள் நீயா
தெரியாமல் துடிக்கிறது
என் இதயத் தோட்டம்

**உடையும்வரை ஒருமுகம்காட்டும்**
**உடைந்தால் பலமுகம் காட்டும்**
**காதலும் கண்ணாடியும்**

## அட்டா

சப்தங்கள் முத்தமிடாத
தேசத்தில் நீயும் நானும்
புதிதாய் சிறகுமுளைத்திருக்கின்றன
உனக்கும் எனக்கும்

சாதியும் மதமும் துரத்தமுடியா
தூரத்தில் நிலாச்சோறு
சமைத்திருக்கிறோம்

ஒத்தப் பருக்கைகூட
சிந்திவிடாமல்
உனக்கு ஊட்டிவிடுகிறேன்

ஆதாமும் ஏவாளுமாய்
ஆடையோடு அலைகிறோம்
எந்தச் சர்ப்பங்களும்
நம்காதலை சந்தேகிக்கவில்லை

என்னை ஏமாற்றி விடமாட்டாயே
புதிதாய் கண்ணீர் வடிக்கிறாய்
சத்தியமாக என
சத்தமாய் கூறிவிட்டேன்
ஆத்திரம் பொங்க
கணக்கு வாத்தியார்
சூத்திரம் கேட்டபோதுதான்
பகல்கனவை உடைத்துக்கொண்டு
வகுப்பறைக்குள் வந்தேன்

நான் வாங்கும் அடியை
நாலாவது வரிசையில்
அமர்ந்தபடி
கலகலத்து சிரிக்கிறாய்

காரணமே நீதான்
என்ற
காரணம் தெரியாமலே...

ஒருவாய் உனக்கு
ஊட்டி விடுவதற்கும்
ஒருசில முத்தங்கள்
உன் கன்னத்தில்
தீட்டிவிடுவதற்கும்
உன் சட்டைக் கொக்கியை
மாட்டி விடுவதற்கும்
சமயலறையில் உன் இடுப்பை
கிள்ளிவிடுவதற்கும்
திருமணமான புதிதில்
கூட்டுக்குடும்பத்தில்
ஒளிந்து நெளிந்து
செய்த
உரிமை விளையாட்டுக்கள்
இன்று நீயும் நானும் மட்டுமே
வசிக்கும் தனிக்குடித்தனத்தில்
சுதந்திரமாய் கிடைக்கிறது...
சுவாரஸ்யமில்லாமல்...

மரங்கள் பூக்களை
பிரசவித்திருக்கிறன...
வண்டுகள் நலம் விசாரித்து
முத்தமிட்டுச் செல்கின்றன...

காக்கைகளின் முத்தங்களில்
பெரும்பாலும்
காமங்கள்
பரிமாறப்படுவதில்லை..
பாசத்தின் உச்சியில்
பசிபரிமாறப்படுகிறது..


பிறக்கும் போது கருவறை
வாழும் போது வீட்டறை
இறக்கும் போது கல்லறை
மூன்றையும் முதுகிலே
சுமக்கும்
நத்தை ஒரு
நகரும் கவிதை....

குப்பைகளை
உயர உயர பறக்கச்செய்து
தன்னை
அடையாளப்படுத்திக்கொண்டது
சூறாவளிக்காற்று



# புனைகதைப் புயல்





# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி

தொடர் -96

காலை விடிந்துநீண்டநேரமாகியும் வதனா எழும்பவேயில்லை. மனவுளைச்சல் உடலலுப்பு எல்லாம் சேர்ந்து ஆழ்ந்த நித்திரையில் ஆழ்த்தியது. அவள் எழுந்து பார்த்தபோது அருகில் குழந்தை தமிழ்நிலாவைக் காணவில்லை என்றவுடன் அதிர்ந்து போனாள். ஆனாலும் நிதானத்துடன் எழுந்து பார்த்தபோது, விடிந்து நீண்ட நேரமாகிவிட்டதையும் நிறையபேர் வந்துநின்று வேலைசெய்கிறார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டாள். அதன்பின்னர்தான் அவளுக்கு அன்றைய தினம்பற்றிய எண்ணம் புலப்பட்டது. கடகடவென பாய்தலையணைகளை எடுத்து வழமையாக வைக்கும் இடங்களில் வைத்துவிட்டு வெளியே வந்தாள். சமையல் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. சிலர் மரக்கறிகளை அரிந்து கொண்டிருந்தனர், சிலர் தேங்காய் துருவிக்கொண்டிருந்தனர், இன்னும் சிலர் அடுப்பின் அருகில் நின்று சமையலை கவனித்துக் கொண்டிருந்தனர்.

எழுந்து வெளியில் வந்தவளுக்கு வெட்கமாக இருந்தது. ஆனாலும் அவளை யாரும் எதுவும் கேட்கவில்லை. பரிதாபமாக பார்ப்பது போல உணர்ந்தாள். மெதுவாக நடந்து அடுப்படிக்குள் நுழைந்தாள். அங்கு மாமியார் ஏதோ வேலைசெய்துகொண்டிருந்தாள்.

"ஏன் மாமி எழுப்பயில்லை..."

அவள் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தவருக்கு மனது திக்கென்றிருந்தது. முகம் வீங்கி சிவந்திருந்தது. அவளைப்பார்க்க கட்டிப்பிடித்து ஓலமிட்டு அழ வேண்டும்போல் இருந்தது. அவளையே பார்த்தபடி இருந்தார்.

"என்ன மாமி ஏன் யோசிக்கிறீங்க... என்னை எழுப்பி யிருக்கலாம் தானே..."

"அதுபிள்ளை உனக்கு உடம்பு சுட்டமாதிரிக்கிடந்தது... அதுதான் படுக்கட்டும் எண்டு விட்டனான்."

சட்டென காரணமொன்றைக் கற்பித்தாள் செல்லம்மா.

"எனக்கு... அலுப்பாய்த்தான் கிடக்கு... ஆனா..... இப்ப காய்ச்சல் இல்லை"

கொட்டாவி விட்டபடி கூறினாள்.

"எழும்பீட்டியே இராத போய் முழுகீட்டு வா... வேலை கிடக்கு"

உள்ளே வந்த தாயார் வேகப்படுத்தினாள்.

"நான் முழுகிறன்... இப்ப பிள்ளை எங்கை......?"

"அவள் இண்டைக்கு உன்னைத்தேடமாட்டாள். நிறைய யாரியள் வந்திருக்கினம் விளையாட்டுத்தான்."

"தேத்தண்ணி குடிச் சிட்டாளோ?"

"இம்.... அவளை நான்பாக்கிறன்... அவள் கவனமாய் விளையாடுவள்,,,, நான் பாக்கிறன்."

"குளிச்சிட்டு இப்ப சாறி கட்டவேண்டாம்.... நல்ல பஞ்சாபியாய் பாத்து போடு."

மாமியார் கூறினார். அதனைக் குறுக்கிட்ட தாயார்..

"பஞ்சாபி எண்டவுடன பளபளண்டு மினுக்கிக்கொண்டு நிக்காம பழசாய் பாத்து போடு."

அவள் நல்லதை உடுத்து என்று மாமியார் கூறியதும், தாயார் இப்படிக்கூறியது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. தன் தாயே தன்னை நடைமுறை தெரியாத பிள்ளையாக கருதி பலர் முன்னிலையில் இப்படிக்கு கூறுகிறாரே என எண்ணியபடி உள்ளே போனாள். 'கணவனை இழந்தவள்' என்றவுடன் தாயே பிள்ளையை அழகானவளாக பார்க்க விரும்பாதளவுக்கு பெண்கள் மீதான அடக்குமுறை பெண்களாலேயே முன்னெடுக்கப்படுவதை நினைக் கும்போது அவளுக்கு ஆத்திரமாக இருந்தது.

"உடையவனில்லாட்டி முழம் கட்டை"

என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு உள்ளே சென்றாள். உடுப்புப்பெட்டியை எடுத்து அதற்குளிருந்து பழைய தாய் போய்விட்டது என்று தான் போடாது வைத்திருந்த ஒரு பஞ்சாபியை எடுத்துக்கொண்டு குளிக்கப்போனாள். கிணற்றடியில் கூட்டம் அதிகமாக இருந்ததால் முன்வீட்டுக்கிணற்றில் குளித்து விட்டுவந்தாள். நீண்டகாலம் போடாத உடுப்புடன் தாயைக்கண்டதும்,

"அம்மா அச்சாச்சட்டை போட்டிருக்கா...

என்று தமிழ் ஓடிவந்தாள். அன்று ஐயர் வந்து கிரியைகள் எல்லாம் முடிய ஒருமணியாகிவிட்டது. அதன்பிறகு பந்தியிருத்தி சாப்பாடு பரிமாறி ஓரளவு வேலைகள் ஒதுங்க மூன்று மணியாகிவிட்டது. அதன் பிறகுதான் ராம்குமார் ஆறுதலாக ஒருகதிரையில் அமர்ந்தான்.

"இனியாவது சாப்பிடுங்கோ தம்பி..."

மாமியார் பலமுறை கேட்டும் அவன் 'தண்ணி மட்டும் போதும்' என்று தேனீரை குடித்து விட்டு வேலை செய்துகொண்டிருந்தான். இப்போது கேட்டபோது உண்மையில் அவனுக்கும் பசிப்பது போல இருந்தது.

"வாறன் மாமி"
என்று எழுந்து போய் இலை எடுத்தான்.

"இஞ்ச போட்டபடி கிடக்கு. அண்ணாக்கு போட்டது உனக்கெண்டு மூடிவைச்சிருக்கு. இப்பிடி இருங்கோ எடுத்துத்தாறன்."

"எனக்கேன்... வதனாவை சாப்பிடச் சொல்லி யிருக்கலாம்தானே."

"உருத்துக்காரர்தான் சாப் பிடவேணும். அப்பாவை சாப்பிடச்சொன்னம். அவர் உங்களுக்கு குடுக்கட்டாம். அவளை யும் கேட்டன் அவள் கொஞ்சம் கிள்ளி எடுத்துச்சாப்பிட்டுட்டு உங்களுக்கெண்டு வைச் சிருக்கிறாள்."

"சரி தாங்கோ..."
"எப்பிடியோ உருத்து உங்களுக்கு தானே. வடிவாய் குறைவைக்காம சாப்பிட்டால் சரி."

அவர் கூறியதில் நிறைய அர்த்தங்கள் பொதிந்திருந்தன. கஸ்ரப்பட்டு சாப்பிட்டு முடித்தான். மாலையிலும் பலர் வந்து போயி னர். ஏதோ இயன்றளவு திருப்தியாய் மகனின் கடமையை செய்துமுடித்த களைப்போடு கணபதிப்பிள்ளையர் ஒருவாங்கில் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டார். அன்றையநாள் கழிந்தது. வந்து நின்றவர்களும் போய்விட்டனர். மாலையிலும் ரவியின் படத்துக்கு விளக்கு வைத்தாள். வதனாவுக்கு மனதில் பெரும்பாரம் இறங்கியது போலவும், ஆனால் பெரும் பதட்டம் ஆரம்பித்திருப்பது போலவும் உணர்ந்தாள். இரவு படுத்து நீண்டநேரமாகியும் நித்திரை வரவில்லை. புரண்டுபுரண்டு படுத்தாள். பக்கத்தில் தர்சாவும் தமிழும் களைப்பில் கால் கைகளை எறிந்து அசந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் எழுந்து இருந்தாள் பின்னர் படுத்தாள். போன் அடித்த சத்தம் அவளுக்கு கேட்கவில்லை. நீண்டநேரத்தின் பின்தான் திடுக்கிட்டு எழுந்தாள். போனைப்பார்த்தாள். பேக்கரி யிலிருந்து கோல் எடுத்திருந்தார்கள். அதற்கு முன்பே நான்கு தடவை மிஸ்கோல் வந்திருந்தது. ஓகே கொடுத்து கதைத்தாள்.

"ஹலோ..."

"அக்கா உங்கட கடைக்கு பாண் போட வந்தனாங்கள். கடை பூட்டியிருக்கு. இண்டைக்கும் திறக்கமாட்டியளா..."

அவளுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை யோசித்தாள்.

"அண்ண நேற்று வேணும் எண்டு சொன்னவர். உங்களத்தாண்டி போட்டம் வரேக்கை வாறம்..."

அவர்கள் வருவதற்கிடையில் கடைதிறக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு வேகமாக எழுந்து போனாள். ராம் எங்கேயோ போயிருந்தான். மோட்டார் சைக்கிலைக்காணவில்லை. விறு விறென்று கடைமுன்பகுதியை கூட்டி தண்ணிதெளித்து கடையை திறந்தாள். வியாபாரம் அமோ கமாக ஆரம்பமானது. நாட்கள் நகர்ந்தன....

காலம் நகர்வதே தெரியாதிருந்தது. விடிந்தால் பொழுதுபடுவதே தெரி யாது. அவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தனர். ஒருநாள் மாலையில் செல்லம்மா மருமகளிடம் திடீ ரென கேட்ட விடயம் அவளுக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். அறிவால் அடையமுடியாத உயர்ந்த இடத்திற்கு நல்லமனநிலை ஒருவனை அழைத்துச் செல்லும்.

உங்களிடமே நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். ஒருகாலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.

மற்றவர்களுக்காக நீங்கள் மேற்கொள்ளும் மிகக்குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

ஒரு எஜமானைப் போல உங்கள் செயல்களைச்செய்யுங்கள். அடிமையைப் போல உங்கள் செயற்பாடுகள் அமையக்கூடாது. முழுமையான சுதந்திர உணர்வும், அன்பும் கொண்டு உங்கள் கடமைகளில் பணியாற்றுங்கள்.

ஒருவருக்கு அவர் யார், எப்படிப்பட்டவர் என்ற சிந்தனையோ கேள்வியோ இல்லாமல் கூட அவருக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது தான் கர்மயோகம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

சிங்கங்களே! எழுந்துவாருங்கள். வீணான மயக்கங்களை உதறித்தள்ளுங்கள். நீங்கள் சுதந்திரமானவர்கள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள்.

பலவீனத்திற்கான காரணத்தை சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துசிந்திப்பதுதான்பலவீனத்திற்கான பரிகாரம்.

உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பும், தன்னலமில்லாத பண்பும் யாரிடம் இருக்கிறதோ அவரை இம்மண்ணுலகமே வேண்டி நிற்கிறது.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நினைவு கூறப்பட்டுப் போற்றப்படும் இல்லத்தின் நிலை உயிருள்ளவர்களின் நிலைக்கும், அல்லாஹ் நினைவு கூறப்பட்டுப் போற்றப்படாத இல்லத்தின் நிலை உயிரற்றவனின் நிலைக்கும் ஒத்திருக்கிறது. அறிவிப்பவர்: அபூ மூஸா (ரலி) நூல்: முஸ்லிம் 1429

நிச்சயமாக அல்லாஹ் வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவான் - அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றைப் பார்க்கிறவன். (குர்ஆன் 49:18) (நபியே!) தொழுகையைக் கொண்டு உம்முடைய குடும்பத்தினரை ஏவுவீராக! இன்னும் அதன் மீது நீரும் நிலைத்திருப்பீராக! உம்மிடம் உணவை நாம் கேட்கவில்லை உமக்கு நாமே, உணவளிக்கிறோம் நல்ல முடிவு- பயபக்தி (உடையவர்களு)க்கே உரியது. (குர்ஆன்20:132) மறுமை நாளில் அடியானிடம் விசாரிக்கப்படும் முதற் கேள்வி அவனது தொழுகையைப் பற்றியதாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நஸயீ) "எத்தகைய இஸ்லாம் சிறந்தது?" என பெருமானாரிடம் கேட்கப்பட்டது.

"பசித்தவருக்கு உணவளித்து, உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கும், தெரியாதவர்களுக்கும் ஸலாம் சொல்லும் இஸ்லாமே சிறப்புடையது" என்று செம்மல் நபி (ஸல்) கூறினார்கள். (புகாரி) அடியான் ஆரோக்கியமானவனாய் ஊரிலிருக்கும்போது செய்யும் நற்செயல்களுக்குக் கிடைப்பது போன்ற(அதே)நற்பலன் அவன்நோயுற்று விடும்போது அல்லது பிரயாணத்தில் இருக்கும் போது (அவன் பாவம் எதுவும் செய்யாமலிருக்கும் வரை) அவனுக்கு எழுதப்படும்.

## ஏசாயா

உண்மையுள்ள நகரம் எப்படி வேசியாய்ப்போயிற்று. அது நியாயத்தால் நிறைந்திருந்தது. நீதி அதில் குடிகொண்டிருந்தது. இப்பொழுதோ அதின் குடிகள் கொலைபாதகர்.

உன் வெள்ளி களிம்பாயிற்று. உன் திராட்சரசம் தண்ணீர்க்கலப்பானது.

உன் பிரபுக்கள் முரடரும் திருடரின் தோழருமாயிருக்கிறார்கள்.

அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்பி கைக்கூலியை நாடித்திரிகிறான். திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரியார்கள். விதவையின் வழக்கு அவர்களிடத்தில் ஏறுகிறதில்லை.

ஆகையால் சேனைகளின் கர்த்தரும் இஸ்ரவேலின் வல்லவருமாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது ஓகோ நான் என் சத்துருக்களில் கோபம் ஆறி என் பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவேன்.

நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி என் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்.

உன் நியாயாதிபதிகள் முன்னிருந்ததுபோலவும் உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன். பின்பு நீ நீதிபுரம் என்றும் சத்திய நகரம் என்றும் பெயர்பெறுவாய்.

சீயோன் நியாயத்தினாலும் அதிலே திரும்பிவருகிறவர்கள் நீதியினாலும் மீட்கப்படுவார்கள்.

துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டுபோவார்கள். கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்.

நீங்கள் விரும்பின கர்வாலிமாங்களினிமித்தம் வெட்கப் படுவீர்கள். நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம் நாணமடைவீர்கள்.

இலையுதிர்ந்த கர்வாலிமாத்தைப் போலவும் தண்ணீரில்லாத தோப்பைப் போலவும் இருப்பீர்கள்.

பராக்கிரமசாலி சணற்கூளமும் அவன் கிரியை அக்கினிப்பொறியுமாகி இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்துபோம் என்று சொல்லுகிறார்.

---

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

அடக்கப்படும் ஒரு மக்கள் குழுமத்துக்குள் உள்ள அமைப்புகள் ஒன்றுபடும்போது அடக்கியாளும் மக்களுக்குள் உள்ள கட்சிகளும் அதற்கு எதிராக ஒன்றுபடுமென கூறுவது பொருத்தமற்றதென உணரத் தவறியமையே மேற்கூறப்பட்ட கருத்துத் தோன்றுவதற்கு ஆதாரமாகவிருந்தது எனலாம்.

எனினும் இக்கூட்டமைப்பில் ஜி.ஜி அவர்களின் தனிநபர் பாரா முகமும், தொண்டமான் அவர்களின் பிரதேச உணர்வுகளின்பாற்பட்ட அக்கறையின்மையும் அவ்வமைப்பைப் பெருமளவில் பலப்படுத்துவதற்குத் தடையாக இருந்து வந்துள்ளன.

தொண்டமான் அவர்கள் பின்னாளில் ஆயுதப்போராட்டம் உருவான போது மலையக மக்களும் தமிழ் ஈழம் என்னும் வரையறுக்கப்பட்ட பிரதேசத்துக்குள் வசிக்கும் காரணத்தினாலேயே தமிழ் ஈழம் என்னும் கோரிக்கை தொடர்பில் தான் அலட்டிக்கொள்ளவேண்டியிருப்பதாகக் கூறித் தனது குறுமதியை அம்பலப்படுத்தியிருந்தார். கிழக்கிலங்கையிலும் ஆரம்பத்தில் இக்கூட்டமைப்புக்குள் இருந்த முக்கியஸ்தர்கள் பின்னாளில் பின்வாங்கி ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துகொண்டார்கள்.

இந்நிலையில் தான் வட்டுக் கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழம் என்னும் தீர்மானத்துக்கமைவாக வடக்கு கிழக்குத் தமிழ் மக்களிடம் ஆணைகேட்டு 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக்கூட்டணி வடக்கிலிருந்து வெகுஜன ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. தமிழ்க் கட்சிகளின் இத்தெரிவானது அவ்கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் நாடாளுமன்றப் பலத்தை அதிகரித்ததேயொழியத் தமிழ் மக்களின் அரசியல் உரிமையின் தொடர்பில் பெரியளவில் பயனுள்ள தாக்கத்தை உருவாக்கவில்லை. இதற்கு அவ்வரசியல்வாதிகள் தம்மால் பிரச்சாரப்படுத்தப்பட்ட ஸ்ரீலங்கா வேறு நாடு, தமிழ் ஈழம் வேறு நாடு என்னும் கருத்தோவியத்துக்கமைவாக வங்கச் சிங்கம் முஜிபர் வழி நின்று செயற்பட்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட தமிழ் ஈழம் என்னும் குறிக்கோளை அடைவதற்காக நேர்மையாகச் செயற்பட முடியாமல் போனமையே காரணமெனலாம்.

இதனால் இவ்வமைப்பையும், இவ்வமைப்பைச் சேர்ந்த அரசியல் தலைவர்களையும் பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாகத் தமிழ் இளையோரும் நிராகரித்ததோடு அவ்வமைப்பையும் அவ்வரசியல் தலைவர்களையும் கண்டுகொள்ளாமலும் விட்டதோடு ஆயுதப்போராட்டத்தையும் தெரிவுசெய்தார்கள். தமிழ் ஈழம் என்னும் குறிக்கோளைக் காட்டிக்கொடுத்துத் தமிழ்த் தலைவர்களும் ஆயுதப்போராட்டத்திற்கு இடையூறாக இருந்தவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டமையுந் தெரிந்ததே. எனவே ஞானமூர்த்தி அவர்களினால் மிகவும் நல்லெண்ணத்தோடு உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியானது எதிர் பார்த்த பயனைத் தமிழ்மக்களுக்கு அளிக்கவில்லையென்பதே பேருண்மையாகும். இதனால் பின்னாளில் ஆயுதப்போராட்டத்தின் மூலமாவது விமோசனத்தைப் பெறமுடியுமென நம்பியிருந்த தமிழ் மக்களையும் தமிழர் உரிமை தொடர்பிலான கொள்கைவாதிகளையும் அதிருப்தியடையக்கூடியவிதமாக அப் போராட்டத்தின் ஐக்கியமும் குலைக்கப்பட்டுச் சிதறிச்சின்னாபின்னமாக்கப்பட்டதன் மூலம் எதிரிகளைச் சந்தோசப்படவைத்தும், ஓட்டுமொத்தத் தமிழினத்தையும் துயரப்படவைத்தும் ஒரு பரிதாபமான நிலையைத் தோற்றுவித்தமை ஞானமூர்த்தி அவர்களின் முயற்சிக்கு ஓர் ஆப்பு வைத்தமேயாகும்.

ஆயுதப்போராட்டத்தின் போது தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுதக்குழுக்கள் யாவும் இராணுவத்தோடு இணைந்து பணியாற்ற வந்தமை தமிழ் மக்களின் துரதிட்டம் என்றே கூறவேண்டும். இவ்வாயுத அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போராடியிருந்தால் விடுதலைப்புலிகளின் போராட்டமானது தோல்வியைத் தவிர்த்திருக்கவுங்கூடும். அவ்வாறுதான் தோல்வியைத் தவிர்க்கமுடியாமல் போயிருந்தாலுங்கூட போராட்டத்தின் காலப்பகுதியாவது இன்றுவரைகூட நகர்ந்துகொண்டிருக்கும். தமிழ் ஈழத் தேசியத்தலைவர் தனது வன்னிக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்துகொண்டு ஒருமுறை எமக்குள் உள்ள சாரார் இராணுவத்தோடு இணையாவிட்டால் என்றைக்கோ தமிழ் ஈழத்தை அமைத்திருக்கலாம் எனக்கூறித் தமது ஆதங்கத்தை வெளியிட்டிருந்தார். அவருடைய இந்த ஆதங்கமானது அவருடைய துயரவீச்சைவிட எம்மை அதிகளவுக்கு ஆதங்கப்படவைத்தமையோடு அதிகளவுக்குத் துயர வீச்சினையும் உருவாக்கியுள்ளது.

எனவே ஆரம்பத்திலிருந்தே தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையீனம் தமிழ் மக்களுடைய உரிமைப்போராட்டங்களை பலவீனப்படுத்தியதோடு தமிழ் ஈழம் என்னும் குறிக்கோளை வென்றெடுப்பதன் மார்க்கமாக முன்னெடுத்த ஆயுதப்போராட்டத்தையும் நலிவுறச்செய்தது.


ஆகவே சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர்.பொன்னம்பலம் மகாதேவா ஆகியோரைத் தான் கருத்துக்கெடுக்காமல்விட்டு ஜி.ஜி. பொன்னம்பலத்திலிருந்தே ஆரம்பித்தாலுங்கூட எஸ்.ஜே.வி.செல்வநாயகம் சுந்தரலிங்கம், தொண்டமான், அமிர்தலிங்கம் என்போர் தொடர்பான அரசியல் அமைவுக்குள் இருந்த ஒற்றுமையீனமே தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்தின் ஒற்றுமையீனத்துக்கும் வழிவகுத்தது எனவே கூற வேண்டும்.

இலங்கையில் விடுதலை நாடி ஆயுதமேந்திய ஒருசாரார் அடக்குமுறையாளர்களின் துருப்பினரோடு இணைந்தமை போன்ற நிகழ்வு உலகில் எந்தவொரு விடுதலைப்போராட்டத்திலும் இடம் பெற்றது கிடையாது.

எனவே ஜனநாயக நீரோட்டத்திலும் சரி, ஆயுத நெறிமுறையிலும் சரி ஒற்றுமையொன்றுதான் தமிழினத்திற்குப் பலத்தைச்சேர்க்கும் என்பதை இவ்விடத்தில் ஆணித்தரமாகக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இதுவரையில் கடந்த காலத்தில் தமிழ்க்கட்சிகள் தமக்குள் கடுங்குரோதத்தோடு மோதல்களில் ஈடுபட்டதன் பெறுபேறாக அவற்றின் ஒற்றுமையீனமேதமிழ்இனத்தின்உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியது என ஆய்ந்தறிந்தோம்.

எனவே தற்போதாவது சம்பந்தன், மாவை சேனாதிராஜா அவர்களை முக்கியஸ்தர்களாகக்கொண்ட தமிழரசுக்கட்சியும், தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களைத் தலைவராகக்கொண்ட புளொட் அமைப்பும், செல்வம் அடைக்கலநாதன் அவர்களைத் தலைவராகக்கொண்ட ரெலோ அமைப்பும், சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பும், ஆனந்தசங்கரி அவர்களைத் தலைவராக்கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணியும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக்கொண்ட தமிழ்க்காங்கிரஸ் அமைப்பும் தமக்குள் ஒற்றுமையை மிகவும் வலுவான நிலையில் பேணித் தமிழினத்திற்குப் பலத்தைச் சேர்க்க முன்வரவேண்டுமென்பதே நடுநிலையாளர்களின் விருப்பமாகவுள்ளது.



# அறிவியல் உலகம்

## அப்பிளின் iPhone இற்கு வயது 8



அப்பிள் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட iPhone ஆனது 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. நோக்கியா மற்றும் பிளாக்பெரி கைப்பேசிகள் பிரபல்யம் பெற்றிருந்த காலப்பகுதியிலேயே இந்த iPhone அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. iPhone அறிமுகமானது ஸ்மார்ட் கைப்பேசி உலகில் புதிய புரட்சியாக பார்க்கப்பட்டிருந்ததுடன் பல மாற்றங்களையும் ஏற்படுத்தியது.

இன்று பிரபல்யம் வாய்ந்த ஸ்மார்ட் கைப்பேசியாகக் காணப்படும் iPhone ஆனது பல மாற்றங்களைக் கண்டு 8 ஆண்டுகளையும் எட்டியுள்ளது. இதே நேரம் இறுதியாக கடந்த வருடம் iPhone 6S மற்றும் iPhone 6S Plus ஆகிய மொடல்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், இவ்வருடம் iPhone 7 அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யும் Xiaomi



சீனாவை தளமாகக் கொண்டு இயங்கும் Xiaomi நிறுவனம் ஸ்மார்ட் கைப்பேசி சந்தையில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து வருகின்றது. இந்நிலையில் புதிதாக வடிவமைத்துள்ள Redmi 2 கைப்பேசியினை அடுத்தவாரம் பிரேஸிலில் அறிமுகம் செய்யவுள்ளது. பிரேஸிலானது உலகிலுள்ள ஸ்மார்ட் கைப்பேசி சந்தைகளுள் முன்னணி வகிப்பதால் அங்கு அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கைப்பேசியானது 4.7 அங்குல அளவு 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரை, Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM, 8GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. மேலும் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா, 2,200 mAh மின்கலம் என்பவற்றினையும் கொண்டுள்ள இக்கைப்பேசியின் விலையானது 160 டொலர்கள் ஆகும்.

## இனிப்பால் வருடம் தோறும் 184,000 பேர் மரணம்



மிகுந்த இனிப்புச் சுவை கொண்ட பானங்களால் வருடம்தோறும் 184,000 பேர் வரையிலானவர்கள் மரணிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. அமெரிக்க ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் போதியளவு ஆதாரங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்காக 1980 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 600,000 பேர் வரையானவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட டயட் தொடர்பான ஆய்வுகளில் 62 சதவீதமான ஆய்வுத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ் ஆய்வின்போது 187 நாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் மட்டும் 184,000 பேர் மரணம் அடைந்துள்ளதுடன் இவர்களில் 133,000 பேர் நீரிழிவு நோயினாலும், 45,000 பேர் இருதய நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொபைல் சாதனங்களுக்கான யூடியூபில் புதிய வசதி

முன்னணி வீடியோ பகிரும் தளமாக திகழும் யூடியூப் ஆனது 60fps வேகம் கொண்டதும், 4K Ultra HD வீடியோக்களை பகிரும் இவ்வருட ஆரம்பத்தில் அறிமுகம் செய்திருந்தது. இவ்வாறான நிலையில் சில மாதங்களின் பின்னர் தற்போது அப்பிளின் iOS மற்றும் கூகுள் Android இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களுக்கான யூடியூப் அப்பிளிக்கேஷன் ஊடாக 60fps வேகத்தில் வீடியோக்களை பார்வையிடும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

இவ் அறிவித்தலை கூகுள் நிறுவனம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளதுடன், 60fps வேகத்தில் உருவாக்கப்பட்ட ஹேம் ஒன்றின் மாதிரியும் வெளியிடப்பட்டுள்ளது.

---

நெல்லி வற்றல், சந்தனத்தூள், கொத்தமல்லி மூன்றையும் தண்ணீரில் ஊற வைத்தபின் வடிகட்டி அந்த நீரை அருந்தி வந்தால் தலை சுற்றல், கிறுகிறுப்பு முதலியன குறையும்.


வெல்லத்தை கெட்டியாகப் பாகு வைத்து அதில் மிளகை ஒன்றிரண்டாகப் பொடித்துப்போட்டு உருட்டி வைத்தால் இருமல் வரும்போது வாயில் அடக்கிக் கொள்ள இருமல் நிற்கும்.

மண் சட்டியில் உப்பை வறுத்துத் துணியில் கட்டி உப்பு ஒத்தடம் இரண்டு மூன்று வேளை கொடுத்தால் கழுத்து வலி நீங்கிவிடும். நூல்கோலைத் துருவி ஊறவைத்து பயத்தம் பருப்பு கலந்து உப்பு பிசறி எலுமிச்சைச்சாறு பிழிந்து சாப்பிட்டால் சர்க்கரை நோய்க்கு அருமருந்தாகும்.

தேங்காய் எண்ணெயை மிதமான தீயில் வைத்துக் காய்ந்ததும் வேப்பிலையைப் போட்டுப் பொரித்து எடுத்துவிடவும். கொத்தாகக்கூடப் போடலாம். பிறகு இறக்கி வைத்துக் கொஞ்சம் வெந்தயம் போட்டு மூடிவைக்கவும். இந்த எண்ணெய்யைத் தலையில் தடவிவந்தால் வெயிலால் வரும் உடல் சூடு குறையும். வெப்ப நோய்கள் தாக்காது.

வயிற்றில் பிரச்சினை ஏற்பட்டால் கொஞ்சம் சீரகத்தை எடுத்து கொதி நீரில் போட்டு கஷாயமாக இரண்டு வேளை குடித்து வர நிவாரணம் கிடைக்கும். மாதுளைச்சாறு தினமும் குடித்து வந்தால் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

## உங்கள் மொபைல் போனில் சிக்னல் இல்லையா?



செல்ஃபோன் சிக்னல் கிடைக்காத இடங்களில் இருக்கும் போது, அவசர உதவிக்கு குறுஞ்செய்தி அனுப்ப ஒரு புதிய கருவியை கோடென்னா நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. ஸ்மார்ட் போன்களில் இணையத்தின் உதவியுடன் இயங்கும் எண்ணற்ற செயலிகளும், வசதிகள் இருந்தாலும், நாளுக்கு நாள் புதுப்புது மாற்றங்கள் வந்தாலும் அவை அனைத்தையும் பயன்படுத்த சிக்னல் தொடர்ந்து கிடைக்க வேண்டியது அவசியமாகும்.

சிக்னல் கிடைக்காத இடங்களை கடக்க நேரிட்டாலோ, நமது செல்போனில் இருந்து ஒரு குறுஞ்செய்தியைக் கூட அனுப்ப முடியாது என்பது தான் யதார்த்தம். இதனால் சிக்னல் கிடைக்காத இடங்களுக்கு செல்ல நேர்ந்தால், யாருக்கும் தகவல் அளிக்கவும் முடியாமல், யாரிடம் இருந்தும் எந்த வித தகவலும் பெற முடியாத நிலை ஏற்படுவதை தவிர்க்க முடியாது. ஆனால் தற்போது அந்த பிரச்சினைக்கும் ஒரு நல்ல தீர்வு சந்தையில் வந்துள்ளது. கோடென்னா (goTenna) என்ற அந்த நிறுவனம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண கருவியையும் அதனை அனைத்து வித ஸ்மார்ட்போன்களில் பயன்படுத்தும் செயலியையும் வடிவமைத்துள்ளது.

அந்த கருவி மற்றும் செயலி நம்மிடம் இருந்தால், அதன் மூலம், செல்போனில் சிக்னல் இல்லாத போதும் குறுஞ்செய்திகளை அனுப்பிக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் யாருக்கு குறுஞ்செய்தி அனுப்புகிறீர்களோ அந்த நபரும், அந்த கருவியை வைத்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் செயற்பாடு யாதெனில், இந்த செயலியை பயன்படுத்தி நாம் எஸ்.எம்.எஸ் அனுப்புகையில், அந்த குறுஞ்செய்தி முதலில் நம்முடைய செல்போனுடன் இணைக்கப்பட்டுள்ள கோடென்னா கருவிக்குச் செல்லும்.

பின்னர் அந்த கருவி, அந்த செய்தியை ரேடியோ சிக்னலாக மாற்றி, அந்த குறிப்பிட்ட நபரின் கருவிக்கு அனுப்பிவிடும். இந்த கருவி மற்றும் செயலி முக்கியமாக சுரங்கப் பணியாளர்களுக்கும், சாகச விரும்பிகள், மலையேறுபவர்கள் மற்றும் காடுகளில் பயணிப்பவர்களுக்கும் சிறந்த கருவியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## ரயில் தண்டவாளத்தில் பயணிக்கும் கார் வடிவமைப்பு



ரயில் தண்டவாளத்தில் பயணிக்கக்கூடிய வகையிலான காரினை சொகுசு கார்களைத் தயாரிக்கும் Mercedes நிறுவனம் வடிவமைத்துள்ளது. நான்கு பேர் பயணிக்கக்கூடிய சிறிய ரயில் போன்று இருக்கும் இக்காருக்கு Smart Forrail எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் தலா 80 கிலோகிராம் எடைகொண்ட நான்கு சில்லுகள் காணப்படுவதுடன் இவற்றில் ரயர்மற்றும்டியூப் இல்லாதவாறு முற்றிலும் இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆறு மாத கடும் உழைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இக்காரானது எதிர்காலத்தில் இலகுவானதும், விரைவானதுமான போக்குவரத்தில் பாரிய பங்களிப்பு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## புகைப்படங்கள் மூலம் புதிய அனுபவத்தை வழங்கும் கூகுள்



பல வகையான நவீன தொழில்நுட்ப சேவைகளை வழங்கி வரும் கூகுள் நிறுவனம் புகைப்படங்களில் புதிய அனுபவத்தினை வழங்கக்கூடிய சேவையினையும் வழங்கி வருகின்றது. இதுவரை காலமும் கூகுளின் விசேட புரோகிராமின் ஊடாக கார்கள், நாய்கள் போன்ற குறிப்பிட்ட பொருட்களை முன்னிலைப்படுத்திக் காட்டக்கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போது கூகுளின் பொறியியலாளர்கள் Inceptionism எனும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் ஊடாக மற்றுமொரு புதிய புகைப்பட அனுபவத்தினை வழங்கவுள்ளனர். இதற்காக குறித்த செயலியின் ஊடாக 10 தொடக்கம் 30 வரையான படைகள் (Layers) உருவாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வலியை உணர்வதில் ஆண், பெண் எலிகளில் வேறுபாடு



மனிதர்களில் ஏற்படும் பல்வேறு வகையான நோய்களுக்கான நிவாரணிகளை கண்டுபிடித்த பின்னர் அவற்றினை எலிகளிலேயேவிஞ்ஞானிகள்பரீட்சித்து பார்ப்பது வழக்கமாகும்.

இவ்வாறிருக்கையில் தற்போது வலியை உணர்வதில் ஆண் எலிகளுக்கும் பெண் எலிகளுக்கும் வேறுபாடு இருப்பதாக அமெரிக்காவின் McGill பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இது பற்றி கருத்து தெரிவித்த விஞ்ஞானிகள் இவ் வேறுபாட்டிற்கான காரணங்கள் தெரியவில்லை எனவும், எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மருத்துவ ஆய்வுகளில் இவ் இயல்பு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

காயங்களின் தன்மைக்கு ஏற்ப வலியை தொடர்பான சமிக்ஞைகளை நரம்புகளில் ஏற்படுத்துவதற்கு Microglia எனும் நோய் எதிர்ப்பு கலமே காரணமாக இருக்கின்றது.

இக் கலத்தில் காணப்படும் வேறுபாடுகளே வலியை உணர்வதிலும் வேறுபாட்டை ஏற்படுத்தலாம் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# விளையாட்டு உலகம்



## பேஸ்புக் பக்கத்தை மூடிய வங்கதேச அணித்தலைவர் மோர்தசா



ரசிகர்களின் மோசமான கருத்தால் வங்கதேச அணித்தலைவர் மோர்தசா தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தை மூடியுள்ளார். சமீபத்தில் முடிந்த இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் வங்கதேசம் 2–1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி சாதனை படைத்தது. இதனால் வங்கதேச அணித்தலைவர் மோர்தசாவுக்கு அவரது பேஸ்புக் பக்கத்தில் பாராட்டுகள் வந்து குவிந்தன.

இந்நிலையில் சகவீரரான நசீர் ஹொசைன் வீடு திரும்பிய பின்னர், இந்திய அணியை வீழ்த்திய மகிழ்ச்சியில் தனது தங்கையுடன் எடுத்த புகைப்படத்தை மோர்தசாவின் பேஸ்புக் பக்கத்தில் இணைத்து பதிவேற்றியுள்ளார். இதைத் தொடர்ந்து ரசிகர்கள் மோசமான கருத்துக்களை பதிவேற்றினர்.

இதனால் கோபமடைந்த மோர்தசா, அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தை மூடியுள்ளார். இது தொடர்பாக மோர்தசா கூறுகையில், இந்த பேஸ்புக் பக்கத்தால் மோசமான அனுபவம் கிடைத்துள்ளது. எனது அணியின் சக வீரர் ஹொசைனுக்காகவே மூடிவிட்டேன். இனி அது எனக்கு தேவையில்லை என்று கூறியுள்ளார்.

## இனிமேலாவது எங்களை கண்டு கொள்ளுங்கள் - ஜுவாலா



ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில் (2016) இந்திய வீரர்கள் பதக்கம் வெல்ல மத்திய அரசு சிறப்பு நிதி உதவி திட்டம் அறிமுகம் செய்தது. இதில் பதக்கம் வெல்பவர் என்று அறியப்படும் நட்சத்திரங்களின் பயிற்சிகளுக்கு நிதி தரப்படுகிறது. இத்திட்டத்தில் பேட்மின்டன் இரட்டையர் வீராங்கனைகள் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா இடம் பெறவில்லை. இதுகுறித்து தற்போது கனடா ஓபன் தொடரில் தங்கம் வென்று திரும்பிய ஜுவாலா கட்டா கூறுகையில், ஒற்றையர் பிரிவு வீரர், வீராங்கனைகளுக்கு கொடுக்கப்படும் ஆதரவைப்போல எங்களுக்கும் தாருங்கள். ஒருவேளை இதுமட்டும் கிடைத்துவிட்டால் நானும், அஷ்வினியும் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது உறுதி.

இனிமேலாவது எங்களைப்பற்றி கொஞ்சமாவது நினைத்துப் பார்ப்பார்கள் என நம்புகிறேன். அரசின் ஆதரவு இருப்பதால் தான் பேட்மின்டன் ஒற்றையரில் பல்வேறு நட்சத்திரங்கள் வருகின்றனர். இது இல்லை எனில் யாரும் வரமாட்டார்கள் என்றும் இதேபோல நாங்களும் அரசின் உதவியை நம்பித்தான் காத்திருக்கிறோம் எனவும் கூறியுள்ளார்.

## உள்ளாடைச் சிக்கலில் சிக்கிய கனடா வீராங்கனை




விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் விதிகளுக்கு புறம்பாக கனடா வீராங்கனை யூஜெனி போச்சார்ட், கருப்பு நிற உள்ளாடை அணிந்து விளையாடியது சர்ச்சையை கிளப்பியுள்ளது. போச்சார்ட், சீன வீராங்கனை யிங் யாங்குடன் தனது முதல் சுற்றுப் போட்டியில் மோதினார். இப்போட்டியில் அவர் 7–6 (7–3), 6–4 என்ற செட் கணக்கில் தோல்வியைச் சந்தித்து வெளியேறினார்.

இந்தப் போட்டியில் போச்சார்ட் தான் அணிந்திருந்த வெள்ளை உடைக்கு உள்ளே கருப்பு நிற உள்ளாடை அணிந்திருந்தார். இதை கவனித்த நடுவர் லூசி என்ஜெல் போச்சார்டை அருகே அழைத்து அவரது உடையைப் பரிசோதித்தார். இதனையடுத்து நடுவர் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு போச்சார்ட் அணிந்துள்ளஉள்ளாடையால் உடையில் ஏதும் விதிமீறல் உள்ளதா என்று கேட்டார்.

விதிமீறல் இருப்பதாக தெரியவில்லை என்று நடுவர் அலுவலகம் விளக்கியதையடுத்து அவர் தொடர்ந்து விளையாட அனுமதிக்கப்பட்டார். விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் கடுமையான விதிமுறைகளைக் கொண்டது. அணிந்து இருக்கும் உடை, ஷு, உள்ளாடை ஆகியவை வெள்ளை வண்ணத்தில் தான் இருக்க வேண்டும்.

மேலும், வீராங்கனைகள் அணியும் ஸ்கர்ட்டுக்கும் அளவு கோல்கள் உள்ளன. இதனால் வீரர், வீராங்கனைகள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். இது பற்றி யூஜெனி போச்சார்ட் கூறுகையில், உள்ளாடை குறித்து யாரும் எதையும் எனக்கு தெரிவிக்கவில்லை என்றும், அதனால் அது தொடர்பாக எனக்கு ஏதும் தெரியாது எனவும் விளக்கம் அளித்துள்ளார். இதேபோன்று கடந்த 2003ம் ஆண்டு ரோஜர் பெடரர் தனது ஷுவில் ஓரஞ் வண்ணத்தில் லேசான கயிறு கட்டி இருந்ததால் அவர் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


## ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண்டே கூலாக பிடியெடுத்த மேக்ஸ்வெல்



இங்கிலாந்தில் காட்சி கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் மேக்ஸ்வெல் ஒரு அசத்தலான கேட்சை பிடித்தார். யார்க்ஷயர் அணிக்கும், பேர்ட்ஸ்லி அணிக்கும் இடையிலான ஒரு காட்சி கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்ட மேக்ஸ்வெல், யார்க்ஷயர் அணிக்காக விளையாடினார். இந்நிலையில் மைதானத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதை மைதானத்திற்கு வெளியில் அமர்ந்து கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டே மேக்ஸ்வெல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு துடுப்பாட்டக்காரர் அடித்த பந்து மேக்ஸ்வெல்லை நோக்கி சீறிக் கொண்டு வந்தது. அதை மேக்ஸ்வெல் பாய்ந்து பிடித்தார். கையில் வைத்திருந்த ஐஸ்கிரீமையும் அவர் தவறவிடவில்லை. இதைப்பார்த்த ரசிகர்கள் கைதட்டி ஆரவாரத்துடன் மேக்ஸ்வெல்லை பாராட்டினர். இது தொடர்பாக டிவிட்டரில் கருத்து தெரிவித்த மேக்ஸ்வெல், “நான் ஐஸ்கீரிம் கேட்ச் பிடித்தேன். எனது டி20 போட்டிகளில் இது ஒரு அருமையான பிடியெடுப்பு” என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவனை கால்பந்து வீரனாக்கி அழகுபார்த்த ரொனால்டோ



சுனாமியில் உறவுகளை இழந்து அனாதையாக நின்ற சிறுவனை கால்பந்து வீரனாக்கி அழகு பார்த்துள்ளார் போர்த்துக்கல் அணியின் வீரர் ரொனால்டோ. கடந்த 2004ம் ஆண்டு தாக்கிய சுனாமியில் உலகம் முழுவதும் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் சுனாமியில் அதிக அழிவுகளை சந்தித்த இந்தோனேஷியாவின் ஏக் கடற்கரை பகுதியில் 21 நாட்களுக்கு பிறகு மட்டுனிஸ் என்ற 3 வயது சிறுவன் அதிஷ்டவசமாக உயிருடன் மீட்கப்பட்டான்.

இச்சிறுவனைமீட்க அவன் அணிந்திருந்த போர்த்துக்கல் அணி வீரர் மனுவேல் ரய் கோஸ்ட்டாவின் ஜெர்சி தான் காரணமாக இருந்தது. அந்த ஜெர்சியுடன் கடற்கடை ஓரமாக மண்ணில் புதையுண்டு கிடந்த மட்டுனிஸ் உயிருடன் மீட்கப்பட்டுள்ளான். இதன் பிறகு ஒரு ஊடகத்திற்கு அவன் அளித்தபேட்டியில், தனதுகுடும்பத்தினரை சந்திப்பதும் கால்பந்து வீரராவதும் தான் தனது கனவு என்று கூறினான்.

அவனது உறவினர்கள் யாரும் உயிருடன் இல்லை. ஆனால் அவனது கால்பந்து ஆசையை அறிந்த போர்த்துக்கல் அணி, அவனது கனவை நிறைவேற்றும் பணியில் களமிறங்கியது. அதிலும் போர்த்துக்கல் அணியின் அணித்தலைவர்ரொனால்டோ, மட்டுனிஸிக்கு இந்தோனேஷியாவில் தேவையான அனைத்து உதவிகளையும் பார்த்து பார்த்து செய்தார். மேலும், இந்தோனேஷியா செல்லும் போதெல்லாம் ரொனால்டோ மட்டுனிசை சென்று பார்த்து அவனது வளர்ச்சியில் தனி அக்கறை காட்டி வந்தார். தற்போது 17 வயது இளைஞனான மட்டுனிஸ், போர்த்துக்கல் நாட்டின் புகழ்பெற்ற ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளான். இதே ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணியில் தான் ரொனால்டோவும் முதன்முதலில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

## இங்கிலாந்தில் கலக்கும் சங்கக்கார



இங்கிலாந்தில் நடக்கும் நாட்வெஸ்ட் டி20 போட்டியில் சங்கக்கார விளையாடி வரும் சர்ரே அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் ‘திரில்’ வெற்றி பெற்றது. ஒருநாள், டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட சங்கக்கார, இந்தியாவுடனான 2வது டெஸ்ட் போட்டியோடு டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து வில கிய சங்கக்கார, நாட்வெஸ்ட் டி20 தொடரில் விளையாடி வருகிறார். இந்நிலையில் சர்ரே–குளோசஸ்சியர் அணிகள் மோதிய போட்டியில் சர்ரே அணி 4 விக்கெட்டுகளால் ‘திரில்’ வெற்றியை பெற்றது. முதலில் விளையாடிய குளோசஸ்சியர் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்களை பெற்றது. இந்த அணியில் மார்ஷால் (32), காக்பெய்ன் (31), ஹான்ஸ்கோம்ப் (39) ஆகியோர் அணியின் ஓட்டங்களை உயர்த்தினர்.

155 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய சர்ரே அணிக்கு ரோய் (34), சங்கக்கார (34), ஃபோக்ஸ் (27) நல்ல நிலைமையை உருவாக்கிக்கொடுத்தனர். இருப்பினும் சர்ரே அணி தோல்வியின் விளிம்புக்கு சென்றது. கடைசி ஒரு பந்தில் 6 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற நிலையில், 40 வயதான அசார் மொகட் சிக்சர் விளாசி அணியை வெற்றி பெற வைத்தார். இவர் 14 பந்தில் 2 சிக்சர் உட்பட 22 ஓட்டங்கள் குவித்தார். இதனால் சர்ரே அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்கள் எடுத்து 'திரில்' வெற்றி பெற்றது.

ஐ.பி.எல் கிரிக்கெட்டை தோற்றுவித்தவரும், முன்னாள் தலைவருமான லலித்மோடி மீது மேலும் பல வழக்குகள் குவிந்துள்ளது. இங்கிலாந்தில் வாழும் இவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்துள்ளது. இவரது பிரச்சினையில் இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா, எதிர்கட்சியான காங்கிரஸ் இருவரும் தினம் புதிய குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர். இந்த பிரச்சினையை சரி செய்ய சோனியாகாந்தி ரூ.384 கோடி அவரது கணவரின் தம்பி மகன் வருண்காந்தி மூலம் கேட்டதாக மோடி தெரிவித்துள்ளார். இவர் மீதான வழக்கில் பெமா சட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் வெளிநாடுகளின் உதவியுடன் இந்திய நீதிமன்றத்துக்கு மோடியை அழைத்து வர முடியும். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு ரூ.425 கோடி ஊடக உரிமம் வழங்கியதில் ரூ.125 கோடி ஊழல் செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஐ.பி.எல். நிதி முறைகேடு தொடர்பாக மொத்தம் 17 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக ரூ.2,200 கோடி நிதிமுறைகேடு என குறிப்பிடப்பட்டு உள்ளது.


## விம்பிள்டன் போட்டியில் இருந்து நடால் வெளியேற்றம்

பிரித்தானியாவில் நடைபெற்று வரும் விம்பிள்டன் தொடரில் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான ரபெல் நடால் அதிர்ச்சி தோல்வியடைந்தார். பிரித்தானியாவின் லண்டனில் விம்பிள்டன் மென்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், 2 முறை விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றியவரும் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான ஸ்பெயினின் ரபேல் நடால், தரவரிசையில் 102வது இடத்தில் உள்ள ஜெர்மனி வீரர் டஸ்டின் பிரவுனை எதிர்கொண்டார். இதில் ரபேல் நடால் 5–7, 6–3, 4–6, 4–6 என்ற செட்களில் டஸ்டின் பிரவுனிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

இந்த வெற்றி குறித்து பிரவுன் கூறியதாவது, இந்த போட்டியில் தோல்வி அடைந்தாலும் என்னிடம் இழப்பதற்கு எதுவுமில்லை என்பதால் தைரியமாக விளையாடியேன். என்னுடைய விளையாட்டு அவரை விளையாட விடாமல் செய்துவிட்டது. அவரால் சீராக விளையாட முடியவில்லை என்று கூறியுள்ளார். இந்த வெற்றிக்கு பின்னர் சமூக வலைதளங்களில்பிரவுனுக்கு வாழ்த்துகள் குவிந்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் 14 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரபெல் நடால் தரவரிசைப் பட்டியலில் 102 வது இடத்தில் இருக்கும் பிரவுனிடம் தோல்வியடைந்ததையடுத்து அவரது ரசிகர்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

# உலகச் செய்திகள்

## ரகசியமாக ஆகாய கப்பலை தயாரித்து வந்த ரஷ்யா



ரஷ்யா 15 மில்லியன் டொலர் செலவில் ராணுவத்திற்கான ஆகாய கப்பல்களை ரகசியமாகத் தயாரித்து வருகிறது. தற்போது இது தொடர்பான புகைப்படங்கள் வெளியாகியுள்ளது, சுமார் 200 ராணுவ வீரர்களை அல்லது 60 டன் கார்கோ பொருட்களை ஏற்றிச் செல்ல வசதியான முறையில் இந்த ராணுவ ஆகாய கப்பல் தயாரித்துள்ளது. வருகிற 2018ம் ஆண்டு இது முழுமையாக தயாராகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆகாய கப்பலின் முக்கிய அம்சம் என்னவென்றால், இதற்கு விமான ஓடு பாதை (ரன் வே) தேவையில்லை. நின்ற நிலையில் இருந்து இந்த ராணுவ ஆகாய கப்பல் அப்படியே செங்குத்தாக எழுந்து பறக்க வல்லது ஆகும். மொத்தம் 2 மொடல்களில் இது தயாராகிறது. மிகப்பெரிய கப்பலான இது, மணிக்கு 86 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. மேலும், மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையிலும் இது செல்லக் கூடியதாகும்.

## விண்ணில் பறந்து சென்ற மர்ம பொருள் – நாசா




ஒளி உமிழும் மர்ம பொருள் விண்ணில் பறந்து செல்லும் காட்சியை நாசா வெளியிட்டு மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், விண்ணில் ஒரு மர்ம பொருள் வெளிச்சத்துடன் பாய்ந்து செல்வது போல் உள்ளது.

ஆனால் இந்த பொருள் விண்கல்லோ அல்லது நெருப்பு பந்தோ அல்ல. அமெரிக்காவின் தென் கிழக்கு பகுதியில் நாசாவின் 5 கெமராக்கள் இதனை படம் பிடித்து உள்ளன. இந்த பொருள், ஒளியை உமிழ்ந்து கொண்டு மணிக்கு 14,500 மைல் வேகத்தில் நகர்ந்து செல்கிறது. இந்த வேகம் விண்கற்களை விட குறைந்த வேகமாகும். புவீஈர்ப்பு விசையில் இருந்து இந்த பொருள் மேல் நோக்கி செல்கிறது, ஆனால் விண்கற்கலாக இருந்தால் அது கீழ் நோக்கித்தான் நகரும். தற்போது, இந்த வீடியோவிற்கான எந்த விளக்கத்தையும் நாசா வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்களை கற்பழித்து உயிருடன் எரித்துக்கொன்ற ராணுவம்



ஆபிரிக்க ராணுவத்தினர் பெண்களை கற்பழித்து எரித்துக்கொன்றுள்ள திடுக்கிடும் தகவல்களை ஐ.நா வெளியிட்டுள்ளது. ஆபிரிக்க நாடான சூடானில், உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கும், ராணுவத்தினருக்கும் இடையே கடந்த 18 மாதங்களாக உள்நாட்டுப் போர் நீடித்து வருகிறது. இந்நிலையில் தெற்கு சூடானில் உள்ள ஐ.நா குழு அளித்துள்ள அறிக்கையில், சூடானின் மேயோம் கவுண்டி பகுதியில் உள்ளூர் மக்களுக்கு எதிரான தாக்குதலில் ராணுவ வீரர்களும், அவர்கள் ஆதரவு போராளிகளும் ஈடுபட்டனர்.

இதில், அப்பாவி உள்ளூர் மக்களை கொன்று குவித்ததுடன், அவர்களுக்குச் சொந்தமான பொருட்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர். அத்துடன் அங்கு வீடுகளுக்குள் புகுந்து பெண்களை கற்பழித்து பின்னர் உயிரோடு எரித்துக் கொன்றுள்ளனர். அதுமட்டுமின்றி குழந்தைகளுக்கு எதிரான வன்செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

## சிறுவர்கள், பெண்கள் உள்பட 150 பேர் சுட்டுக்கொலை – நைஜீரியா



நைஜீரியா நாட்டில் ரம்ஜான் தொழுகையில் ஈடுபட்டிருந்த அப்பாவி சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 150 நபர்களை போகோஹாரம் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியா நாட்டின் Borno மாநிலத்தில் உள்ள 3 கிராமங்களில் ரம்ஜான் நோன்பு முடிந்து மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, மசூதிகளுக்குள் திடீரென புகுந்த சுமார் 50 தீவிரவாதிகள், தொழுகையில் இருந்த மக்களை நோக்கி சரமாரியாக சுட்டுள்ளனர்.

பின்னர், மசூதிகளை விட்டு வெளியே வந்த தீவிரவாதிகள் கிராமங்களில் இருந்த வீடுகளுக்குள் புகுந்து சிறுவர்கள், பெண்களை வெளியே இழுத்து வந்து வீதியில் வைத்துக்கொன்று குவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் சுமார் 150 நபர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த புதன் கிழமை மாலை வேளையில் நிகழ்ந்த இந்த தாக்குதலில், Kukawa என்ற கிராமத்தை சேர்ந்த மக்கள் மட்டும் சுமார் 97 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பெண்களை தீவிரவாதிகள் சுடவில்லை என கூறப்பட்டாலும், மசூதிகளில் சரமாரியாக சுட்டதில் பெண்களும் பலியாகி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த தாக்குதல் நிகழ்ந்த பின்னர், எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்காத நிலையில், போகோ ஹராம் தீவிரவாதிகள் தான் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கக் கூடும் என அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் கடந்த மே மாதம் Muhammadu Buhari அதிபராக பதவி ஏற்றதற்கு பின்னர் நிகழ்ந்துள்ள பயங்கரமான தாக்குதல் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சர்வதேச மன்னிப்பு சபையான அம்னிஸ்ட்டி வெளியிட்டுள்ள புள்ளிவிபரத்தில் கடந்த 2009ம் ஆண்டு முதல் சுமார் 17 ஆயிரம் அப்பாவி மக்கள் தீவிரவாத தாக்குதலுக்கு பலியாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## ஐ.எஸ்க்கு எதிராக களமிறங்கிய ஜெய்ஸ் அல் இஸ்லாம் அமைப்பு

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக ஜெய்ஸ் அல் இஸ்லாம் என்ற அமைப்பு களமிறங்கியுள்ளது. சிரியாவில் சுமார் 25 ஆயிரம் பேருடன் இந்த இயக்கம் உருவாகியுள்ளது, தங்களை இஸ்லாமிய மார்க்கத்தின் இராணுவம் என கூறிக்கொள்ளும் இவர்கள், ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர். ஐ.எஸ் தீவிரவாதிகள், பிற மதத்தவர்களையோ அல்லது, பிறநாட்டு பணையக் கைதிகளையோ பிடித்து, ஆரஞ்சு வண்ண ஆடை உடுத்தச்செய்து, கழுத்தறுத்து கொலை செய்வது வழக்கம். அதற்கு பதிலடியாக ஜெய்ஸ் அல்-இஸ்லாம் அமைப்பு தீவிரவாதிகளால், ஐ.எஸ் தீவிரவாதிகள் சிலர் பிடிக்கப்பட்டு, அவர்களுக்கு கறுப்பு ஆடை அணிவித்து, ஜெய்ஸ் அல்-இஸ்லாம் தீவிரவாதிகள் ஆரஞ்சு ஆடை அணிந்துகொண்டு, துப்பாக்கியால் பின்னந்தலையில் சுட்டு துடிக்க துடிக்க கொன்றுள்ளனர். தீவிரவாதிகளின் கழுத்தை அறுக்கும் முன்பாக, ஜெய்ஸ் அல்-இஸ்லாம் குழுவின் கமாண்டர் உருது மொழியில் “அல்லா எந்த ஒரு நோயையும் மருந்து இல்லாமல் உருவாக்குவதில்லை” இவ்வாறு கூறிவிட்டு சுட்டுக்கொல்ல சகாக்களுக்கு உத்தரவிடுகிறார். தற்போது இந்த வீடியோ ஐ.எஸ் தீவிரவாதிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வானிலை அறிக்கையை தவறாக கூறிய ஜேர்மனி



ஜேர்மன் வானிலை அறிக்கை மையம் North Rhine-Westphalia மக்களுக்கு பனிப்பொழிவு அபாயம் உள்ளதாக எச்சரித்தது. வானிலை அறிக்கை பற்றி மேற்கு ஜேர்மனி பகுதி மக்களுக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. இதில் அங்குள்ள மக்களுக்கு 5 முதல் 10 செ.மீ அளவுக்கு பனிப்பொழியும் வாய்ப்புள்ளது. இதனால் காரில் பயணிப்பது உகந்ததல்ல என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் அதே சமயம் அந்த பகுதி மக்கள் 35டிகிரவரைவெப்பத்துடன்நீலவானத்தை ரசித்து கொண்டிருந்தனர். இது பற்றி வானிலை மையத்தின் செய்தித்தொடர்பாளர் கூறுகையில், நாங்கள் புதிதாக வானிலை எச்சரிக்கை கருவியை சோதித்துப் பார்த்தோம். ஆனால் அது தவறுதலான அறிக்கையை மக்களுக்கு அனுப்பிவிட்டது என்று மன்னிப்பு கேட்டுள்ளது.

## 142 நபர்களை பலி வாங்கிய விமான விபத்து



இந்தோனேஷியாவில் நிகழ்ந்த ராணுவ விமான விபத்தில் 142 பேர் பலியானதைத் தொடர்ந்து, விமான விபத்திற்கான காரணத்தை ராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். இந்தோனேஷிய ராணுவத்திற்கு சொந்தமான The Hercules C-130 என்ற ராணுவ விமானம் ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உட்பட சுமார் 122 பேர் கடந்த செவ்வாய் கிழமை பயணம் செய்துள்ளனர். சுமத்திரா நகருக்கு அருகில் உள்ள மெடானிலிருந்து புறப்பட்ட அந்த ராணுவ விமானம் இரண்டு நிமிடங்களுக்குள் அங்குள்ள ஹொட்டல் மற்றும் மசாஜ் மையத்தின் மீது விழுந்து வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 122 பேர் மற்றும் ஹொட்டல் மற்றும் மசாஜ் மையத்திலிருந்த நபர்கள் என மொத்தம் 142 பேர் பலியாகினர். ராணுவ விமானத்தில் வீரர்களின் குடும்பத்தினர் உட்பட, பிற பயணிகள் சுமார் 70 (சிங்கப்பூர்) டொலர்கள் கொடுத்து பயணம் செய்துள்ளனர். அதிக எண்ணிக்கையில் நபர்கள் பயணம் செய்ததால் தான் விமானம் விபத்துக்குள்ளானது என மக்களிடையே புகார் எழுந்தது. இந்த புகார்களை மறுத்து அறிக்கை வெளியிட்டுள்ள ராணுவ அதிகாரிகளில் ஒருவரான Agus Dwi Putranto என்பவர், 51 வருடங்கள் பழமையான இந்த விமானத்தில் சுமார் 12.5 டன் வரை எடையுள்ள பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும்.

ஆனால், விபத்து நடந்தபோது விமானத்தில் 8 டன் எடையுள்ள பயணிகளே இருந்துள்ளதால், விமானம் எடை காரணமாக விபத்துக்குள்ளாக வாய்ப்பில்லை என்றார். விபத்திற்கான காரணத்தை விரிவாக விளக்கிய அவர், விமானம் புறப்பட்ட இரண்டு நிமிடங்களில் அதில் இருந்த 4 என்ஜின்களில் ஒரு என்ஜின் தவறாக செயற்பட்டுள்ளது. இதனால், விமானத்தின் இறக்கைகளும் செயலிழந்ததால் விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கக்கூடும் எனத் தகவல் அளித்துள்ளார். விபத்தில் பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணிமுடிவடைந்துள்ளநிலையில், ராணுவ விமான விபத்து தொடர்பாக விரிவான விசாரணையை மேற்கொண்டு வருவதாக Agus Dwi Putranto தெரிவித்துள்ளார்.

## 11 ஆயிரம் அவுஸ்திரேலியர்களுக்கு எச்.ஐ.வி பரவும் அபாயம்



அவுஸ்திரேலியாவில்பல்மருத்துவர்களின் அலட்சிய போக்கு காரணமாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு எச்.ஐ.வி வைரஸ் தொற்றும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. சுமார் 11 ஆயிரம் பேர் இந்த ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த 12 பல் மருத்துவர்கள் பற்களை சுத்தம் செய்யும் உபகரணங்களை சுத்திகரிக்காமல் சுகாதாரமின்றி சிகிச்சைகளை அளித்துள்ளனர். இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த மருத்துவர்களிடம் சிகிச்சைபெற்ற 11 ஆயிரம் பேரை எச்.ஐ.வி. மற்றும் கல்லீரல் அழற்சிக்கான குருதி பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மாகாண சுகாதார நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

நியூ சவுத்வேல்ஸ் மாகாண சுகாதரத்துறையினருக்கு கடந்த ஆண்டு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. இதில் பல மருத்துவர்கள் அரசாங்கத்தின் சுகாதார விதிமுறைகளை பின்பற்றவில்லை எனத் தெரியவந்துள்ளது. இதனையடுத்து 6 பல் மருத்துவர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 6 மருத்துவர்கள் நிபந்தனைகள் அடிப்படையில் சேவையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவுஸ்திரேலிய சுகாதார துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விந்தை உலகம்


## தனது பிஞ்சுப் பாதங்களைப் பதித்து, வேகமாக ஏறும் 20 மாதக் குழந்தை

அரிஸோனாவில் வசிக்கும் எல்லி, 7 அடி சுவற்றில் தன் பிஞ்சுப் பாதங்களைப் பதித்து, வேகமாக ஏறிவிடுகிறாள். 20 மாதக் குழந்தையான எல்லி, 8 மாதத்திலேயே சுவர் ஏற ஆரம்பித்துவிட்டாள். எல்லியின் அம்மா ரேச்சலும், அப்பா ஸாக்கும் மலை ஏறும் வீரர்கள், ஜிம் பயிற்சியாளர்கள். வயிற்றில் எல்லி இருந்தபோது கூட மலை ஏற்றம் செய்த துணிச்சல்காரர் ரேச்சல். அதனால்தானோ என்னவோ எல்லிக்கும் சுவர் ஏறுவதில் ஆர்வம் விரைவில் வந்துவிட்டது. எல்லி பிறந்த சில நாட்களிலேயே ரேச்சல் ஜிம்முக்குச் சென்றுவிட்டார். அங்கே எல்லி கண் விழித்துப்பார்த்தால், யாராவது சுவரில் ஏறும் பயிற்சியைச் செய்துகொண்டிருப்பார்கள். ஒருகட்டத்தில் ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாத எல்லி, தானே சுவரில் ஏறுவதற்கு முயற்சி செய்தாள். குழந்தையின் ஆர்வத்தை முடக்க மனமில்லாமல், பயிற்சி அளிக்க முடிவு செய்தனர். எல்லிக்காக மூன்றடியில் ஒரு சுவர் வைக்கப்பட்டது. கீழே பாதுகாப்புக்கான மெத்தைகள் போடப்பட்டன. அத்துடன் ரேச்சல், ஸாக் அருகில் இருக்க, எல்லி சுவர் ஏற ஆரம்பித்தாள். வெகு விரைவில் இந்தக் கலையின் நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டாள். இன்று 7 அடி உயரத்தைச் சில நிமிடங்களில் ஏறிக்கடந்து விடுகிறாள்.


## இரட்டை தலையோடு இருக்கும் அதிசயமான பல்லி

இரட்டை தலை பறக்கும் நாகம் அல்லது வேதாளம் என்ற மிருகம் முன்னர் உலகில் வாழ்ந்ததாகப் பல கதைகளில் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் இதனை சீனர்களே நம்புவது வழக்கம் ஆகும். பின்னர் அது அருகி அழிந்துபோனது என்று கூறப்படுகிறது. மேலும் அதன் எச்சமாக மிஞ்சி இருப்பது பல்லி மற்றும் ஓணான் போன்ற உயிரினங்களே ஆகும். இருப்பினும் அவை இரட்டை தலையோடு பிறப்பது இல்லை. ஆனால் இங்கே நீங்கள் பார்க்கும் இந்த அரிய வகை பல்லி இரட்டை தலையோடு பிறந்துள்ளது. இதற்கு முன்னரும் இதுபோன்ற பல்லி இரட்டை தலையோடு பிறந்துள்ளது என்கிறார்கள். உலகில் உள்ள மிகவும் பழைய ஊர்வன இனத்தில் இந்த பல்லி இடம்பிடித்துள்ளது. குறித்த இந்த பல்லி இனத்தை, லெதர்-பக் லிசாட் என்று அழைக்கிறார்கள். இதன் தோல் ஒரு வகையான கரடு முரடான பட்டையால் ஆனது.




## பூமியிலிருந்து மேகத்துக்கு செல்லும் மழை – பிரமிப்பூட்டும் காட்சி

ஆபிரிக்கா கண்டத்தின் தென்பகுதி நாடுகளான ஸாம்பியா மற்றும் ஸிம்பாப்வேக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் விக்டோரியா நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. ஒரு கி.மீ.க்கு மேல் பாயும் அகல நீர்ப் பரப்பும் 100 மீற்றருக்கு மேல் ஆழமும் உள்ள நீர்வீழ்ச்சி உலகில் விக்டோரியா மட்டும்தான். வட அமெரிக்காவில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியைப் போல இரு மடங்கு உயரமும், ஹார்ஸ் ஷூ நீர்வீழ்ச்சியை விட இருமடங்கு அகலமும் கொண்டது. ஆர்ஜென்டினா மற்றும் பிரேசிலில் உள்ள இகாஸூ நீர்வீழ்ச்சி மட்டுமே விக்டோரியா நீர்வீழ்ச்சியோடு போட்டியிடக் கூடியது. 40 கி.மீ. தூரத்துக்கு மேல் இதன் கர்ஜனை ஒலி கேட்கும். 50 கி.மீ. தூரத்திலிருந்தும் அருவியின் உயரத்தைவிட இருமடங்கு எழும் இதன் அடர்த்தியான வெண்புகையை பார்க்கலாம்.



பகலில் தெறிக்கும் நீர்த்திவலைகளில் வானவில் தோன்றுவது மட்டுமல்ல, பௌர்ணமி இரவிலும் நிலவு, சூரிய ஒளியை எதிரொளிப்பதால் வானவில் தோன்றுகிறது. இதை 'மூன்பவ்' என்று அழைக்கின்றனர்.

## ரோபோக்களுக்குத் திருமணம்



ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இரண்டு ரோபோக்களுக்கு முதல் முறையாக திருமணம் நடைபெற்றுள்ளது. மய்வா டெங்கி (Maywa Denki) என்ற நிறுவனம் தயாரித்துள்ள இந்த ஆண் ரோபோவுக்கு புரோயிஸ் (Frois) என்றும், பெண் ரோபோவுக்கு யுகிரின் (Yukirin) என்றும் பெயரிடப்பட்டுள்ளது. ஆண் ரோபோ அளவில் பெரியதாக எந்திர மனித உருவிலும், பெண் ரோபோ ஜப்பான் பொம்மை வடிவத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த பெண் ரோபோவுக்கு மணப்பெண் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. திருமணம் முடிந்ததும் இரு ரோபோக்களும் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக்கொண்ட காட்சி அனைவரையும் நெகிழ வைத்தது. திருமண விழாவில் இரு தரப்பிலும் பல ரோபோக்கள் விருந்தினர்களாக பங்கேற்றன. பின்னர் ஜப்பான் முறைப்படி கேக் வெட்டி, ஆடல், பாடல் போன்ற இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.






















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 05.07.2015 அன்று வெளியிடப்பட்டது.